விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 07 செவ்வாய்க்கிழமை (22.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 003

## உணவுத் தட்டுப்பாடு இலங்கைக்கு ஏற்படும்

### உலக உணவு நிறுவனம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த வருடத்தில் உணவு தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலை காணப்படுவதாக உலக உணவு நிறுவனம் எச்சரிக்கை 19

## ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா புதிய பிரேரணை

### சண்டே ரைம்ஸ் செய்தி வெளியீடு

(கொழும்பு)

அடுத்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக புதிய பிரேரணை ஒன்றினை கொண்டுவர அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அமெரிக்காவும் 19

# ஏமாற்ற முடியாது!

## சுமந்திரனின் குற்றச்சாட்டுக்கு விக்னேஸ்வரன் சாட்டையடி



(யாழ்ப்பாணம்)

- இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் பெற்றுக் கொடுக்க சுமந்திரன் முயற்சி.
- எல்லோரையும் எல்லாக்காலத்திலும் ஏமாற்ற முடியாது.
- சுமந்திரனுக்கு சட்டம் படிப்பித்த ஆசிரியரான என்னை ஏமாற்றுவது குருத்துரோகம்.
- சுமந்திரன் அனுப்பிய ஆவணத்தின் மொழிபெயர்ப்பை வெளியிடத் தயாராக இருக்கிறேன்.

(19ஆம் பக்கம் பார்க்க)



ஜனவரி 11ஆம் திகதி

## பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்

கல்வி அமைச்சர்

09ஆம் பக்கம் பார்க்க

யாழில் நேற்று

## 3 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று மூன்று பேருக்கு கொரோனா வைரஸ தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று 19

அரசின் முகவராக செயற்படும் சுமந்திரனுக்கு

## நீதி தொடர்பில் கதைப்பதற்கு எந்த அருகதையும் கிடையாது



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(கிளிநொச்சி)

சுமந்திரனுக்கு நீதி தொடர்பில் கதைக்க எந்த அருகதையும் கிடையா 19

## மேல் மாகாணத்துக்கு சென்றதை அறிவிக்காததால்

### பருத்தித்துறையில் இரு வர்த்தக நிலையங்களுக்கு சீல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்துறையில் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றாமல் 19

தமிழருக்கு அதிகாரப் பகிர்வு

## வழங்கக்கூடாது என்பதில் சரத் வீரசேகர உறுதி

நாம் இதனை ஏற்க மாட்டோம்

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்

03ஆம் பக்கம் பார்க்க

கிளிநொச்சியில் புதைக்கப்பட்டிருந்த

## ரி56 ரக துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி அறிவியல்நகர் காட்டுப்பகுதியில் பயன்படுத்த முடியாத நிலையிலான ரி 56 ரக துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் விசேட அதிரடிப்படை 19

எதிர்வரும்

## 30ஆம் திகதி யாழ்.மாநகரின் புதிய முதல்வர் தெரிவு

06ஆம் பக்கம் பார்க்க

## நாட்டில் மேலும் 370 பேருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 370 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக 19

மன்னார் - ஏ32 பிரதான வீதியில்

## சுமார் 46 இலட்சம் ரூபாய் பெறுமதியான கஞ்சா மீட்பு



(மன்னார்)

மன்னார் - யாழ்ப்பாணம் ஏ32 பிரதான வீதியில் 91ஆம் கட்டை பகுதியில் சுமார் 46 இலட்சம் ரூபாய் 19

## புதிய வகை கொரோனா

### பயணத் தடை விதித்த ஐரோப்பிய நாடுகள்

18ஆம் பக்கம் பார்க்க

## மாஞ்சோலைப் பகுதியில்
# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேருக்கு கொரோனா

கிண்ணியாவில் மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவில் உள்ள ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐந்து பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, அண்ணல் நகர் கிராம சேவகர் பிரிவிலும் ஒருவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மக்கள் அவதானமாக செயற்படுமாறும் உடன் அமுலுக்கு வரும் வகையில் கடைகள், மதஸ்தலங்கள் போன்றவற்றை மூடுமாறும் கோவிட் - 19 ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற கூட்டத்தின் போது இவ்வாறான தீர்மானங்கள் எட்டப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (ம-03)

## தமிழகத்திலிருந்து
# இலங்கைக்குள் நுழைந்த ஐவர் மன்னாரில் கைது

(மன்னார்)

இந்தியா தமிழகத்திலிருந்து கடல் வழியாக இலங்கைக்குள் நுழைந்த 5 பேர் மன்னாரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போரின் காரணமாக படகுகள் மூலம் உயிர் தப்பி இந்தியாவிற்குச் சென்ற ஈழ அகதிகளில் பலர் தம்மை கப்பல் மார்க்கமாக நாட்டிற்கு திருப்பியனுப்புமாறு கோரிக்கை விடுத்து வருகின்றபோதும் இதுவரை அனுப்பி வைக்கப்படாத காரணத்தினால் பலர் படகு மூலமே மீண்டும் நாட்டிற்குள் பிரவேசிக்கின்றனர்.

இவ்வாறு நேற்று முன்தினமும் ஓர் படகு மூலம் ஐவர் நாட்டிற்குள் பிரவேசித்துள்ளனர்.

இவ்வாறு படகில் வந்து இறங்கியவர்களில் முத்துராமு கலைச்செல்வன் - புத்தளம், அமாதுல்லா பாத்திமா சுயா- மன்னார் - புத்தளம், அந்தோணிப்பிள்ளை யுகதாஸ், சூசையப்பர் கோவிலடி, கோப்பாய் வடக்கு, தர்மலிங்கம் ஜெயசீலன் பொல்காவலை, சுமையோன் பிரிஸ் செல்ரன் பீரிஸ் பூந்தோட்டம் வவுனியா ஆகிய ஐவருமே இவ்வாறு படகு மூலம் மன்னாரை அடைந்தனர். மன்னாரை வந்தடைந்த இந்த ஐவரும் தற்போது மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-03)

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணர் சிவகுரு

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நகர சபை - வவுனியா)

பிறப்பு 08.03.1937 இறப்பு 21.12.2020



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் பாரதிபுரம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் சிவகுரு நேற்று (21.12.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் நாகலிங்கம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் மாணிக்கவாசகர், ஆறுமுகம் காலஞ்சென்ற ஆச்சிமுத்து மற்றும் ஞானசுந்தரியின் அன்புச் சகோதரனும் அருள்மொழி, அருட்செல்வி ஆகியோரின் அன்புத் தந்தையும் கதிர்காமநாதன், சிவநேசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அஜன், அகிலன், அனுசன், குகப்பிரியா, மோகனஜீவன், வசந்த் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இராசேந்திரகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-985)

பாரதிபுரம்.
வவுனியா.

077 735 4947


தகவல்:-
குடும்பத்தினர்

# கண்ணீர் காணிக்கை

கொக்குவில்
மத்திய சனசமூக நிலையத்தின்
ஆர்வலர் பு. ஆரூரன்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்

## சோமசுந்தரம் புவனசுந்தரம்

(C-984)



அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்
( K.C.C.C. & K.C.C.S.C. )

# 31ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## கணபதிப்பிள்ளை அழகேந்திரன் (அழகன்)

(பழைய மாணவன், யாழ் இந்து கல்லூரி உயர்தர கணிதப்பிரிவு - 2006)



அழகா...! அழகா...!
ஏன்தான் அவசரப்பட்டாய்
நாங்கள் எண்மருடன் ஒற்றுமையின் சின்னமாய்
ஒன்றாக வளர்ந்தாய்... தம்பி அழகா

பால்வடியும் பச்சை முகம்
தளிர் கண்களில் தெரியும் மிரட்சி
சற்றே தடக்கும் வார்த்தைகள்
இருந்தபோதும் படிப்பில் பயமில்லாத நீ
கற்றதை மற்றவர்க்கும் கற்பித்தாய் ... தம்பி அழகா

உத்தமியாம் எம் அன்னை மடியில்
நவரத்தினங்களாய் நாம் விளையாடி
அமுதுண்டு அயர்ந்துதூங்கி
களிப்புற்ற கணங்களை காலனவன்
கண்டதுதான் உன் முடிவுக்கு காரணமோ ...தம்பி அழகா

கார்த்திகை மாதம் கடுங்குளிர் நேரம்
ஊரெல்லாம் உள்ளே முடங்க
நீமட்டும் உன் இரு குழந்தைகளைத் தவிர்க்கவிட்டு
எங்கே சென்றாய் ..... தம்பி அழகா

தந்தைக்கு நண்பனாய் தாய்க்கு குழந்தையாய்
அண்ணன்மார்களுக்கு மறுபடியும் அடம்பிடிக்கும்
அன்புத்தம்பியாய் நண்பர்க்கும் மற்றவர்க்கும்
தத்துவம் உரைக்கும் வித்தகனாய்
விடை பெற்று செல்லத்தானோ இவ்
விளையாட்டெல்லாம் விளையாடினாய்.... தம்பி அழகா

ஆறாத துயரம் அழியாத நின் நினைவில் வாழுகின்றோம் உம் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர சவுந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வர பெருமான் பாதங்களை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 24.02.1987 மறைவு 22.11.2020

நீலிப்பந்தனை, காரைநகர் குடும்பத்தினர்

# அதிகாரப் பகிர்வு வழங்கக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளவர் சரத் வீரசேகர

## இதனை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள்

(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கு எந்தவிதமான அதிகாரப் பகிர்வும் கொடுத்துவிட கூடாது எனும் நிலைப்பாட்டிலேயே அமைச்சர் சரத் வீரசேகர இருப்பதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**


மாகாண சபை முறைமை தேவையற்றது, என அமைச்சர் சரத் வீரசேகர, பல இடங்களில் தெரிவித்து வருகின்ற கருத்து தொடர்பில் நேற்று சி.வி.விக்னேஸ்வரனிடம் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் வழங்கும் போதே சி.வி.விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

அமைச்சர் சரத் வீரசேகர இவ்வாறு சொல்லும் போது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் வேறு சிலர் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தவுள்ளதாக கூறுகின்றார்கள்.

ஆகவே அரசாங்கம் அவ்வாறும் கூறுகின்றது



இவ்வாறும் கூறுகின்றது.

தமிழ் மக்களுக்கென்று எந்தவிதமான அதிகாரப் பகிர்வும் கொடுக்கக் கூடாது, இந்த நாடு சிங்களவர்களுடையது, நாங்கள்தான் சிறுபான்மை மக்களுக்கு கொடுப்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேணும் எனும் கருத்துடையவர் சரத் வீரசேகர.

அவருடைய கருத்து பிழையானது என்பதனை நான் பல தடவைகள் எடுத்துக்கூறி வந்திருக்கின்றேன். அதாவது அவருடைய கருத்து என்று சொல்லுவதை விட அவர் கூறும் அந்த கருத்து என்று சொல்லலாம்.

உதாரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே சிங்களவர்கள் எந்த காலத்திலும் பெரும்பான்மையாக இருக்கவில்லை.

சரத் வீரசேகர பிழையான கருத்துக்களை பிழையான அடிப்படையில் வெளியிட்டு வருகின்றார்.

அவர் அவ்வாறு செய்வதால் இந்த நாட்டிலே மக்களிடையே ஐக்கியமும், நல்லுறவும் ஏற்படாது என்பதனை அவர் மனதிலே வைத்திருக்க வேண்டும்.

எனவே அவருடைய கருத்தை வடகிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# வீட்டிலேயே இருந்தால் புதிய கொத்தணிகளை தடுக்கலாம்

## வைத்தியர் ஹேமந்த

(கொழும்பு)

நத்தார் பண்டிகையின் போது வீட்டிலேயே இருக்குமாறு பிரதி சுகாதார சேவை இயக்குநர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் சுற்றுலா பயணம், உறவினர் வீட்டிற்கு செல்லுதல், உட்பட ஆடம்பர செயற்பாடுகளை நிறுத்த வீட்டிலேயே இருக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார ஆலோசனைகளுக்கு எதிராக பண்டிகை காலப்பகுதியில் செயற்பட்டால் நாடு முழுவதும் கொரோனா கொத்தணிகள் ஏற்பட கூடும் என அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஓரிரு நாட்களில் நத்தார் பண்டிகை ஆரம்பமாகிறது. அத்துடன் புத்தாண்டும் பிறக்கவுள்ளது. இந்த நாட்களில் பலர் தேவையற்ற சுற்றுலா பயணங்கள் உறவினர்கள் வீட்டிற்கு செல்லுதல். விருந்துகள் நடத்துதல் போன்றவற்றை நிறுத்த வேண்டும்.

எனினும் தற்போது உள்ள நிலைமைக்கு மத்தியில் அவ்வாறு செய்வது பொருத்தமானதல்ல. அதனால் மக்கள் மிகவும் பொறுப்புடன் செயற்பட்டு, அனைத்தையும் தவிர்த்து வீட்டில் இருந்து நத்தாரை கொண்டாட வேண்டும்.

நத்தார் தினத்தன்றும் தேவாலயங்களில் ஒன்று கூட வேண்டாம். அனைவரும் வீட்டில் இருந்தால் கொரோனா பரவலை தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# தொற்றுக்குள்ளான பெண்ணின் பொறுப்பற்ற செயலால் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பம்

(பலாங்கொட)

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை ஏற்றிச்சென்ற பேருந்தில் இருந்து ஒருவர் வெற்றிலை துப்பியதால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த குடும்பத்தினர் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

பலாங்கொட, சமனல வேவாவில் அமைந்துள்ள கொரோனா தொற்று சிகிச்சை நிலையத்திற்கு சென்று கொண்டிருந்த பேருந்தில் இருந்து கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணொருவர் வெற்றிலை துப்பியுள்ளார்.

இதனால் குறித்த பேருந்திற்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இதனையடுத்து 119 எனும் பொலிஸ் அவசர இலக்கத்திற்கு செய்யப்பட்ட முறைப்பாட்டினையடுத்து மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# சமூக ஊடகங்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஊடக சுதந்திரம் மீதான ஒடுக்கு முறையாகும்

## மனித உரிமை ஆர்வலர் கருத்து

(கொழும்பு)

நாட்டில் சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவுசெய்யும் நடவடிக்கை மக்களின் கருத்து சுதந்திரத்தின் மீதான ஒடுக்குமுறை என மனிதவுரிமை ஆர்வலர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான ஒடுக்குமுறை இருக்கக்கூடும் என்பதை இது காட்டுகின்றதாக குறிப்பிட்டுள்ள அவர் சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவு செய்ய அரசாங்கம் ஏன் விரும்புகிறது என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேவேளை கருத்து சுதந்திரம் மற்றும் அரசாங்கத்தை விமர்சிக்கும்



மக்கள் மீது கட்டுப்பாடுகளை வைப்பதற்கான முதல் படியாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாகவும் அம்பிகா சற்குணநாதன் கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரைப் பதிவு செய்வதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

சமூக ஊடகங்களை பயன்படுத்துவோர் மத்தியில் சுயகட்டுப்பாட்டை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என்றும் முகப்புத்தகம் உள்ளிட்ட சமூக ஊடகத்தைப் பயன்படுத்துவோரை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சமாதான நீதவானாக நியமனம்



(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் குமாரசாமி சிவானந்தம் அண்மையில் யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

தென்மராட்சி-மீசாலைப் பகுதியைச் சேர்ந்த இவர் அதிபராகவும் மற்றும் சாவகச்சேரி கல்விக் கோட்டத்தின் கோட்டக்கல்வி அலுவலராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# இலத்திரனியல் ஆட்சி தொடர்பான முயற்சியை உச்சி மாநாட்டில் எடுத்துக்காட்டிய அமைச்சர்




(கொழும்பு)

இலத்திரனியல் ஆட்சி மற்றும் சைபர் பாதுகாப்பின் கீழான இலங்கையின் முன்முயற்சிகளை உலகளாவிய வர்த்தக உச்சி மாநாடு - 2020 இல் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன எடுத்துக் காட்டியுள்ளார்.

21 ஆம் நூற்றாண்டு அறிவு மற்றும் புதுமைகளால் வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை அங்கீகரித்து, மக்களை மையமாகக் கொண்ட மற்றும் அறிவால் இயங்கும் இலங்கைக்கான புதிய தொடக்கத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்ப்பதாக இலத்திரனியல் ஆட்சி மற்றும் சைபர் பாதுகாப்பின் கீழான உச்சி மாநாட்டில் உரையாற்றிய வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, குடிவரவு மற்றும் குடியகல்வு, நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பதிவு, மோட்டார் போக்குவரத்து, வருமான வரி மற்றும் உள்ளூராட்சித் துறைகளில் இலத்திரனியல் ஆட்சி உட்பட்ட சேவைகள் காணப்படுகின்றன.

இலத்திரனியல் ஆட்சி, இலத்திரனியல் வணிகம் மற்றும் இலத்திரனியல் மருத்துவம் மற்றும் அத்தகைய டிஜிட்டல் மயமாக்கல்கள் கொவிட்-19 க்குப் பிந்தைய உலகில் உள்ள "புதிய இயல்பான" நிலைமையை வரையறுக்கும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

புடாபெஸ்ட் சைபர் குற்ற மாநாட்டிற்கான அரச தரப்பாக மாறிய முதலாவது நாடு இலங்கை என்பதை சிறப்பித்துக் கூறிய அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, சைபர் தாக்குதல்கள், பிஷிங் மோசடிகள் மற்றும் இதுபோன்ற தீங்கிழைக்கும் செயல்களுக்கு வழிவகுப்பதால், இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவருடன் கலந்தாலோசித்து, கட்டாய சைபர் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை சைபர் பாதுகாப்புக்கான இலங்கை மையம் வெளியிட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# 8 இலட்சம் வழக்குகள் நிலுவையில்;நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க தீர்மானம்



(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் சுமார் 8 இலட்சம் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் இவற்றினை முடிக்க குறைந்தது 15 ஆண்டுகள் ஆகும் என நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, வழக்குகளை விரைவுபடுத்துவதற்காக நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டிய அவசியம் காணப்படுவதாக நீதி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயதுன்னே தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள நெரிசலைக்குறைப்பதற்காக 8000 கைதிகள் புனர்வாழ்வளிக்கப்படவுள்ளதாகவும் நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம் முதலில் போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையானவர்களை ஒரு வருட காலத்திற்குள் புனர்வாழ்வளிப்பதற்கும் நீதி அமைச்சு எதிர்பார்த்துள்ளது. (நி-4)

# சமூக ஊடகங்களின் செயற்பாட்டை அடக்க முயலும் அரசாங்கம்

## சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமூக ஊடகங்களின் பயன்பாட்டை அடக்க அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவு செய்வதற்கான அரசாங்கத்தின் செயற்பாடு ஜனநாயக விரோத செயல் என தெரிவித்துள்ளார்.



மேலும் இதுபோன்ற முடிவுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நிற்கும் என்றும் சமூக ஊடகத்திற்கான சுதந்திரம் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.பல சந்தர்ப்பங்களில் தான் சமூக ஊடகங்கள் மூலம் தனிப்பட்ட முறையில் தாக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ள சஜித் பிரேமதாஸ கருத்துரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.(நி-4)

# வலம்புரி 21 ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்துச் செய்திகள்



## வாசகர்களை வளம்படுத்தும் வலம்புரி

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் நாளிதழான வலம்புரி 21 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியதே.

காலத்தின் கண்ணாடியாகத் திகழும் வலம்புரி பல்துறைசார் செய்திகளை தம் வாசகர்களுக்கு வழங்குவதுடன் பல சேவைகளையும் செய்து கொண்டிருக்கிறது.

தினமும் ஆன்மீகம் சார்ந்த உண்மைகளை வலம்புரி மூலம் வெளிப்படுத்தி வருங்காலத்தில் சண்டை சச்சரவில்லாத அமைதியான சமுதாயமொன்றை உருவாக்குவதற்கான பெருமுயற்சியொன்று நடைபெறுகிறது. இவ்வாறே தினமும் வலம்புரி சிறுவர் அரங்கத்தில் சிறுவர்களை நல்வழிப்படுத்தக்கூடிய கதையொன்றைப் பிரசுரித்து இன்றைய சிறார்களை நல்லொழுக்க மானவர்களாக திகழ வைக்கும் செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்துடன் மாணவர்களின் கல்வித் துறையையும் விளையாட்டுத்துறையையும் ஊக்குவிப்பதிலும் வலம்புரி பெரும் பணியாற்றுகிறது.

நம் நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியாமலிருக்கும் ஆட்சியாளர்களை தட்டிக் கேட்கும் விதத்தில் அதிகளவிலான ஆசிரியர் தலையங்கங்கள் வலம்புரியில் வெளிவருகின்றன. இவையாவும் இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளிலிருந்து பெறப்பட்ட உதாரணங்களுடன் எழுதப்படுவதால் வாசகர்களை கவர வைப்பதுடன் இனங்களுக்கிடையிலான சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் வலம்புரி மிகுந்த அக்கறையுடனிருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் வலம்புரியுடன் இணைந்து வரும் சங்குநாதத்தில் கவிதைகள், சிறுகதைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்து பல எழுத்தாளர்களை உருவாக்கி வருவதும் பாரட்டப்பட வேண்டியதே. இதைவிட வாசகர்கள் நோய்களில்லாமல் சுகதேகிகளாக இருக்க வேண்டுமென்ற விருப்புடன் சுகமான விடியல் என்ற பகுதியில் பல மருத்துவ ஆலோசனைகளை வெளியிடுவது மிகவும் பயன்பாட்டிற்குரியதாகும்.

இவ்வாறே வாசகர்களை பலதுறைகளிலும் வளம்படுத்தும் வலம்புரி 22 ஆவது அகவையிலும் புதுப் பொலிவுடன் சிறப்பாக வெளிவர என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலாபூஷணம் சி.காசிப்பிள்ளை**
**கொடிகாமம்.**

## அறிவொளி பரப்பும் கதிரவன்

இலங்கிடும் நற்புகழ் கொண்ட
ஈழமென்னும் திருநாட்டினிலே
அறிவொளி பரப்பும் கதிரவன் நீதான்
மாந்தர்களை ஒன்றுபடுத்தும்
நாளிதழ்களுக்கு தலைவனும் நீதான்
பூமிகளில் எழுச்சியை ஊட்டும் அச்சாணியும் நீதான்.

பல்துறை ஆளுமை பெற்ற பண்பறிவாளன்
தலைமையில் உதித்து
நாத ஒளிபரப்பும் வலம்புரியே நீடு புகழ் நீ வாழ
ஈழமெங்கும் பரந்து வாழும் -உன்
வாசகர்களின் வாழ்த்துக்கள்

வானிடை தோன்றும் பல் கோடி தாரகைகள் போல
உலகெங்கும் வாழும் மானிடர் எண்ணங்களை
காத்திரமாய் அறிந்து நித்தம் ஆயிரம் கோலமுறு
செய்திகளை காத்திரமாய் அறிந்து
நித்தம் ஆயிரம் கோலமுறு செய்திகளை நீதருவாய்

நாட்டின் தலைமை மாந்தருக்கு - அவர்
இணை கொண்ட அதிகாரிகளுக்கும்
அறிவுரை சொல்லி
அவர்களின் நெறி பிறளா செய்கைக்கு
அச்சமின்றி அவரவர் தவறை சுட்டிக்காட்டி
நல்லவற்றை ஏற்றிப் புகழ்ந்தும்
மண்ணுலக மாந்தர்க்கும் நெறிமுறை காட்டி
இதிகாசத்தை இடையிடையே சொல்லி
எம் இன விடியலுக்காய் நித்தம் ஒலிக்கும்
உந்தன் ஆசிரிய தலையங்கமோ
உந்தனுக்கு முதுகெலுப்பு

மனித உடலுக்கு அங்கங்கள் போல
உந்தனுக்கு பகுதிகள் ஆயிரம் - அவை
அத்தனையையும் சொல்வதென்றால் வரையறையற்ற
வான மண்டலத்துக்கு இணையாகிவிடும்
இன்று போல என்றும்
உந்தன் பணி தமிழரின் உரிமைக்காக ஒலிக்கட்டும்
தமிழர் நாம் தாயகத்தில் புதுமை படைக்க
அது துணையாய் அமையட்டும்

**நித்தி கவியழகன்**
**தாவடியூர்.**

## 415 பேர் குணமடைவு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 28 ஆயிரத்து 267ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் மேலும் 415 பேர் குண மடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது. இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 37 ஆயிரத்து 261 ஆக காணப்படுகின்றது.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 176 பேர் உயிரி ழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சுற்றுலாப் பயணிகளுக்கு

# இறுக்கமான சுகாதார நடைமுறை

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி

**(கொழும்பு) விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப் படவுள்ள நிலையில் சுற்றுலாப் பயணி களுக்கு கொரோனாத் தொற்று உறுதியா னால் 14 நாட்கள் தனிமைப்படுத்தலை முடித்த பின்னரே நாட்டிற்குள் அனுமதிக்கப் படுவார்கள்.**



விமான நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற் கொண்ட கண்காணிப்பு விஜயத்தை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆரம்ப சுகாதார மற்றும் கொரோனாக் கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தனிமைப்படுத்தல் நடைமுறை களைப் பின்பற்றுவதை அவதானிப் பதற்கும் அவர்களுக்கு பரிசோதனை களை மேற்கொள்வதற்குமான திட் டங்கள் விமான நிலையத்தில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் காலமான 14 நாட்கள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணிகள் தமது சுற்றுலா தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட முடியும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே குறிப்பிட்டார். (நி-4)

# முதலாவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

அமரர்

## மு.விஜயரகுநாதன்

(முன்னாள் கணக்காளர், யாழ். மாவட்ட செயலகம்)

(யாழ்.போதனா வைத்தியசாலை)

திதி - 22.12.2020



தவப்பேறு 30.05.1951

சிவப்பேறு 03.01.2020

எங்கள் அன்புக்குரிய தெய்வமே எப்பிறப்பில் காண்போம்?

திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் (மனைவி)
(இளைப்பாறிய அதிபர்)
பிள்ளைகள், மருமக்கள்
மைத்துனர், மைத்துனிகள்

246.4A கோவில் வீதி,
நல்லூர்.


(5013)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.செல்வன்

## கந்தசாமி கஸ்தூரன்(கஜன்)

| அன்னை மடியில் | சந்நிதியான் அடியில் |
|---|---|
| 1993.05.23 | 2020.01.03 |




ஆண்டொன்று ஆனது
மகனே அம்மாவால்
ஆற்ற முடியவில்லை! ஆராரோ....
பாடிய அம்மாவை ஆறாத துயரால்
அனுபவிக்க விட்டாயே!
ஆண்டவன் அடி சேர்க்க
உன்னை சந்நிதி
ஆறோடு ஆறாய்
அள்ளியெடுத்தானே!!.
ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 03.01. 2020 அன்று தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆற்றில் சங்கமமாகிய அமரர்.செல்வன் கந்தசாமி கஸ்தூரன் (கஜன்) அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்தி கிரியை இன்று (22.12.2020) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

மாலாவத்தை,
புலோலி வடமேற்கு,
மந்திகை.

(C-962)

தகவல்:
குடும்பத்தினர்.
077 173 7724

# 02 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## திரு.சின்னத்தம்பி சிவலிங்கம்

[ ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் J/R.D.H.S.Office ]

திதி - 22.12.2020 பூர்வ பக்க அட்டமி



எம் உயிரினில் உறைந்திட்ட உத்தமரே
நீங்கள் இல்லா வாழ்வுதனில் நிம்மதியினை இழந்து
விழியோரம் கண்ணீரை நிரந்தமாக்கிவிட்டு
காற்றோடு கலந்ததேனோ
உங்கள் திருமுகம் எங்கே காண்போம் என
ஏங்கும் எங்கள் உள்ளம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சி நிற்கும் உங்கள்

அன்னை மடியில் 03.01.1948

ஆண்டவன் அடியில் 14.01.2019

(C-968)

இல.31, முருகன்வீதி,
ஆடியபாதம் றோட், திருநெல்வேலி. 0762954484

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

வைத்திய கலாநிதி

## மரிசலீன்பிள்ளை மரியதாசன் (JP)

(பேரின்பம் - வல்வெட்டித்துறை)

சுகாதார வைத்திய அதிகாரி (2001-2011)

யாழ். மாநகர சபை



பிறப்பு 12.07.1942

இறப்பு 22.11.2011

எங்கள் அன்பே நீங்கள் எங்கே
உங்களை காணாமல் தவிக்கும்
உறவுகள் இங்கே.
(பேரன் அருணன்)

ஆவேமரியா,
72, கோவில் வீதி,
சுண்டுக்குளி,யாழ்ப்பாணம்.

(5011)

கண்ணீர் மல்க
குடும்பத்தினர்

## க.பொ.த (சா.த) ஆசிரியர்களுக்கான விசேட அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

2020 க.பொ.த(சா/த) வகுப்பு மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு, 2021 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் இடமாற்றப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள க.பொ.த.(சா/த) 2020 வகுப்பு மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களை தங்கள் வலயத்திலிருந்து 2021. 02.28 ஆம் திகதியின் பின்னர் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஏனைய ஆசிரியர்களை முன்னைய இடமாற்றக் கட்டளையில் குறிப்பிட்ட திகதியில் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் அறிவித்துள்ளார். (5)

## யாழ்.மாநகரசபை முதல்வர் தெரிவு எதிர்வரும் 30

(நல்லூர்)

யாழ்.மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு தோற்கடிக்கப்பட்டதன் விளைவாக வறிதாக்கப்பட்டுள்ள யாழ். மாநகர சபையின் முதல்வர் பதவிக்கான தெரிவு எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற வுள்ளது.

இவ் அறிவித்தலை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம. பற்றிக் டிறஞ்சன் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்டிருந்த யாழ். மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு கடந்த 16 ஆம் திகதி, மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்டினால் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. பாதீட்டுக்கு ஆதரவாக 21 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 3 வாக்குகளால் பாதீடு தோற்கடிக்கப்பட்டதனால், சட்ட ஏற்பாடுகளுக்கமைய முதல்வரின் பதவி வறிதாக்கப்பட்டது.

அந்த இடத்துக்கு மீண்டும் முதல்வர் ஒருவரைத் தெரிவு செய்யும் வகையில் 2012 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66ஏ பிரிவின் கீழ், மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் அடிப்படையில் யாழ். மாநகர சபைக்குப் புதிய முதல்வர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன் கிழமை இடம்பெறவுள்ளது.(5-4-33)

## எழுதுமட்டுவாழ் ஒல்லாந்தர் வீதியை புனரமைக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

நாகர்கோவில் வீதியில் ஆரம்பித்து- எழுதுமட்டுவாழ் வடக்கு வீதியில் முடிவடையும் ஒன்றரைக் கிலோமீட்டர் நீளமான எழுதுமட்டுவாழ் வடக்கு, தெற்கு ஒல்லாந்தர் வீதியை புனரமைத்துத் தருமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம் பிள்ளை கோரிக்கைக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.அக் கடிதத்தில்,

இவ் வீதி,வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குரியது என்பதால் இதனைப் புனரமைக்க சாவகச்சேரி பிரதேசசபை முயற்சி எடுக்கவில்லை.வீதி சீரின்மையால் வடமராட்சி மக்கள் எழுதுமட்டுவாழ் ,பளை போன்ற பிரதேசங்களுக்கு செல்வதானால் கொடிகாமம் சென்றே செல்லவேண்டியுள்ளது.

இதனால் நேரம் விரயமாவதுடன்,வீண் செலவும் ஏற்படுகிறது. ஒல்லாந்தர் வீதிபுனரமைக்கப்படும் பட்சத்தில் வட மராட்சி மக்கள் சுலபமாக தென் மராட்சிக்கு பயணம் மேற் கொள்ள முடியும். அத்துடன் இவ்வீதி மருதங்குளம் பிள்ளையார் ஆலயம்,விழுபளை கண்ணகி அம்மன் ஆலயம், எழுதுமட்டுவாழ் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றுக்கு செல்வதற்கான பிரதான போக்கு வரத்துப் பாதையாகவும் காண படுகிறது.

குறித்த வீதியால் துவிச்சக் கரவண்டியில் கூட பயணிக்க முடியாத நிலையில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கால்நடையாகவே பய ணம் மேற்கொள் கின்றனர். எனவே வீதியின் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு ஒல்லாந்தர் வீதியை புனரமைப்புச் செய்ய ஆவன செய்து தரவேண்டும். எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (5-4-30)

## பொறுப்பற்ற சிலரின் செயற்பாடுகளால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம்

(நல்லூர்)

பொதுமக்களின் சில பொறுப்பற்ற செயற்பாடுகளினால் டெங்கு நுளம்பு பெருகலாம் என யாழ்.போதனா வைத்திய சாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போதைய டெங்கு நிலைமை தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்பொழுது பெய்யும் பருவ மழையினால் எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோய் பரவல் ஏற்படலாம்.

எனினும் யாழ். போதனா வைத்தியசாலையில் இம்மாதம் டெங்கு நோயாளி எவரும் அனுமதிக்கப்படவில்லை.

ஆனால் பொதுமக்களின் பொறுப்பற்ற சில செயற்பாடுகளினால் டெங்கு நுளம்பு எமது பிரதேசத்தில் பெருகலாம். குறிப்பாக மழை பெய்த பின்னர் வீதியோரங்களில் திண்மக் கழிவுகளை வீசி விட்டுச் செல்லும் சம்பவங்கள் தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இது மிகவும் பாரதூரமான விடயமாகும். ஏனெனில் கொரோனா பரவுகின்ற காலத்தில் நாங்கள் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் வைத்திய சேவைகளை தொடந்து நடத்தி வருகின்றோம்.

இந்நிலையில் குறித்தளவு வளத்துடன் தொடர்ச்சியாக வைத்திய சேவையினை மேற்கொள்வதற்கு டெங்கு நோயாளர்கள் அதிக அளவில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படாமல் இருப்பதற்கு பொது மக்கள் மத்தியில் முன் கூட்டியே விழிப்புணர்வு செயற்பாட்டினை ஏற்படுத்த வேண்டும்.

எனவே சுற்றாடல் சுத்தம் மிகவும் முக்கியமானது.வீட்டுச் சுற்றாடலில் நீர் தேங்கி.இருப்பின் அவற்றில் நுளம்புக் குடம்பிகள் பெருகலாம். எனவே அவற்றினை இல்லாது செய்தல் அவசியமாகும்.


இந்த விடயத்தில் பொது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். பொதுமக்களுக்கு டெங்கு நோய் அறிகுறிகள் இருந்தால் அவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் குருதிப் பரிசோதனை செய்வதன் மூலம் அதற்குரிய சிகிச்சையினை பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-33)

## க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கு சுயகற்றல் இறுவெட்டுக்கள்

(யாழ்ப்பாணம்)

இவ் வருடம் க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் (மார்ச்2021) தோற்றவுள்ள மாணவர்களுக்கு பரீட்சையை மையப்படுத்திய மீட்டல் வினாக்களும், அதற்கான விடையளிக்கும் முறை தொடர்பான ஒலிப்பதிவினைக் கொண்ட இலத்திரனியல் கற்றல் மென் பொருட்கள் தமிழ்,ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களுக்கும் மற்றும் விருப்புப் பாடங்களுக்குரிய 3ம் தவணை அலகுகளுக்கான இலத்திரனியல் கற்றல் மென்பொருட்களும் கொண்ட 2ம் தொகுதி இறுவெட்டுக்கள் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் LMDM அலகினால் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ் இறுவெட்டுக்கள் தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு வலய பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென அந்தந்த வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ள்ளன.

வடமாகாணத்தின் ஏனைய வலயப் பாடசாலைகள் தமக்குத் தேவைப்படும் இறுவெட்டு ஒன்றினை பாடசாலை அதிபரின் கோரிக்கைக் கடிதத்தை உரிய சுகாதார நியமங்களைப் பின்பற்றி யா/நல்லூர் ஆனந்தா வித்தியாலயத்தில் இயங்கும் வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் LMDM அலகில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும்.இறுவெட்டை பெற்றுக்கொள்ளும் பாடசாலை அதிபர்கள் உரிய நியமங்களைப் பின்பற்றி மாணவர்கள், சுய கற்றலில் ஈடுபட அவற்றைப் பிரதி செய்து வழங்க முடியும் என வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார். (5)



சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நவாலி வடக்கு ஜே/134 கிராம அலுவலர் பிரிவில் "சௌபாக்யா" திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிக் குடும்பம் ஒன்றிற்கான வீட்டிற்கு நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.இவ் நிகழ்வில் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் செயலாளர் வின்சேந்திரராஜா கலந்துகொண்டு வீட்டிற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். (படம்-சுபேசன்)

## வாரத்தில் ஒருநாளாவது ஓய்வு தாருங்கள்

(யாழ்ப்பாணம்)

முகக் கவசங்களை அணிந்து, உங்களைக் காத்துக் கொள்வதன் மூலம் எங்களுக்கு வாரத்தில் ஒரு நாளாவது ஓய்வு தாருங்கள் என்று பி.சி.ஆர்.சோதனைகளில் ஈடுபடும் வைத்தியர் ஒருவர் பொது வெளியில் கோரியிருக்கிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீட பி.சி.ஆர் பரிசோதனைக் கூடத்தில் பணியாற்றும் வைத்தியரான ஆ. முருகானந்தன் தனது விழிப்புணர்வுப் பதிவொன்றின் மூலம் பகிரங்கமாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் தனது பதிவில் "யாழ்ப்பாண மருத்துவ பீடத்தின் கொவிட் - 19 பி.சி.ஆர் பரிசோதனை கூட, கடந்த மாதத்தில் 2 ஆயிரம் சோதனைகளைக் கடந்து விட்டது.

உங்கள் முகங்களுக்குக் கவசங்களை அணியுங்கள். ஆகக் குறைந்து ஞாயிற்றுக் கிழமைகளிலாவது எங்களுக்கு ஓய்வு தாருங்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த வைத்தியரும், அவரது மனைவியும் பல்கலைக் கழக மருத்துவபீட பி.சி.ஆர் ஆய்வு கூடத்தின்ஆரம்ப காலம் முதல் வாரத்தில் ஏழு நாள்களும் ஓய்வின்றிப் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். (5-4-33)

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 2021 ஆம் ஆண்டுக்கான அறிவித்தல்

- நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01. கட்டளைச் சட்டத்தின் 160 (3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப்பெறுமதியின் **10%** மான வரியொன்றினை 2021 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜுன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்படவேண்டும்.

02. 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் **10%** கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் **5%** கழிவும் அனுமதிக்கப்படும்.

03. மேற்சொல்லப்பட்ட பந்தி - 1 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக் காணிகள், வதிவிடங்கள் மீது **15%** உம் மற்றும் ஏனைய இடங்கள் மீது **20%** உம் விறாந்துக்கட்டணம் அறவிடப்படும்.

04. ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2021 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

- சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் 2021 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம், வியாபார வரிக்கட்டணங்களை செலுத்தி 31.03.2021 காலப்பகுதிக்குள் உரிமம், பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வியாபார உரிமம் பெற்றுக்கொள்ளாத, வியாபார வரி செலுத்தாத வியாபார நிலையங்கள் அனைத்தும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.
- 2021 ஆம் ஆண்டிற்கான விளம்பர கட்டணங்களை செலுத்தி விளம்பரங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். புதிதாக அமைக்கப்படும் விளம்பரங்கள் அனுமதி பெற்றே காட்சிப்படுத்தப்பட வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் நகரசபையினால் அகற்றப்படும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி கட்டணங்களை செலுத்தி உரிமத்தகடுகளை பெற்றுக் கொள்ளுமாறும் வளர்ப்பு நாய்களுக்கான பதிவுகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.
- 2021 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும் புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.
- ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச்சொந்தக்காரர்கள் பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை நகரசபையில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
- நகரசபைக்கு உட்பட்ட தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், எல்லைச்சுவர், குழாய்க்கிணறுகள் அமைப்பதாயின் அனுமதி பெற்று அமைக்கப்படல் வேண்டும். புதிய கட்டடத்தினை புனரமைப்பதாயின் நகரசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்ட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும். கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் நகரசபையுடன் தொடர்பு கொண்டு படிவங்களைப்பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் **(COC)** பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.
- தொழில் வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000 ஆம் ஆண்டு 22 ஆம் திகதி 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் திண்மக்கழிவுகளை நகரசபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்படல் வேண்டும்.

**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**
**22.12.2020**

(C-965)

**சிவமங்கை இராமநாதன்,**
**தவிசாளர்.**

# சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டம் மேலும் 822 பேர் இணைவு

(கல்முனை)

வறிய குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வேலைத்திட்டத்துக்கு அமைவாக 574 பணியாளர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை மட்டக்களப்பில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' தேசிய கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக இந்தத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 822 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கே.கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் கட்டமாக 248 பேர் இணைத்துக்கொள்ளப்பட்டு அவர்களுக்கான ஆறு மாதகால பயிற்சி நெறிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில், இதன் இரண்டாம் கட்டமாக 574 பணியாளர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றீது. (நி-4)

# ரஜமஹா விகாரை புனித பூமியாக பிரகடனம்



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில், பொலநறுவை வரலாற்று சிறப்புமிக்க சொலஸ்மஸ்தான ரஜமஹா விகாரை புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

பொலநறுவை வரலாற்று சிறப்புமிக்க சொலஸ்மஸ்தான ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தி சன்னஸ் பத்திரம் கையளிக்கும் புண்ணிய நிகழ்வு புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கல்கே விகாரை உத்தராராமவில் இடம்பெற்றது. (நி-4)



உ
சிவமயம்
ஓம் நமசிவாய

# திருமுறை, திருவாசக பாராயணம்

சிற்றம்பலத்தின் கண் திருநடம் புரிகிறவருமான எம்பெருமானை வழிபட்டு ஏத்திப்போற்ற மிகக் கொடியனவையாகிய பெருநோய்களும் தற்சமயம் உலகம் பூராகவும் அச்சம் தரும் கொரோனாவும் தம் வலி இழந்து எவ்வித விளைவுமின்றி ஒழிந்துபோக மார்கழி மாதம் பூராகவும் திருவாசகம் ஓதுவோம். "ஓம் நமசிவாய"

ஆனந்தக் கூத்தனின் திருவடிகளையே முழுமையான பற்றுக்கோடாகக் கொண்டு வழிபடுகிற அன்பர்களை எவ்விதப்பாவமும் துன்புறுத்தமாட்டாது. "ஓம் நமசிவாய" திருஞானசம்பந்தர் வாக்கு.

அழகுறப் பின்னிப் பின்புறத்தில் தொங்குமாறு விடப்பட்ட திருச்சடையை உடையவனுமான கூத்தப் பெருமானை இமைப்பொழுதும் மறவாத சிந்தையில் கொண்டுள்ளோர் மயக்க உணர்வுகள் அனைத்தும் நீங்கப் பெறுவர். "ஓம் நமசிவாய" திருஞானசம்பந்தர் வாக்கு.

உலகத்தவர் யாவரும் ஏத்திப்போற்றி வழிபடுமாறு வீற்றிருக்கும் திருக்கோயிலை உடையது சிற்றம்பலமே. "ஓம் நமசிவாய" திருஞானசம்பந்தர் வாக்கு.

வீரக்கழல் அணிந்த திருவடியை நாளும் ஏத்திப் போற்றுகிற இன்பமே உண்மையான பேரின்பம் "ஓம் நமசிவாய" திருஞானசம்பந்தர் வாக்கு.

வீரக்கழல் அணிந்த திருவடிகளை அல்லாமல் வேறு ஒன்றையும் எம் உள்ளம் நாடாமல் நாளும் ஏத்திப்போற்றுகிற செல்வமே நிலையான செல்வமாகும். உண்மையானதும் நமது கடமையும் ஆகும். "ஓம் நமசிவாய"

உலகத்துப்பல்லுயிரும் ஏத்திப்புகழுமாறு சிற்றம்பலத்து நடனமாடியை சிரமேற் கொண்டு நாளும் வணங்குவார் தலைமைத் தன்மை பெற்றுப் பொலிவுடன் விளங்குவார். "ஓம் நமசிவாய"

நாள்தோறும் ஏத்திப்போற்றி துதிப்பார்க்கு பிறவிப்பிணி உள்ளிட்ட தீராத நோய்கள் அனைத்தும் தீர்தல் உறுதியாகும். "ஓம் நமசிவாய" திருஞானசம்பந்தர் வாக்கு.

வாழ்க்கை என்பது துன்பமும் இன்பமும் கலந்ததே ஆகும். விதை இல்லாமல் மரமில்லை, வினையின்றித் துன்பமில்லை. தமிழ் வேதப் பாடல்களைத் தவிர நமது துன்பங்களைப் போக்குபவை வேறு யாதுமில்லை. மனம் ஒன்றிப் பாராயணம் செய்து வந்தால் கை மேல் பலன் கிடைக்கும் என்பதே அவரவர் அனுபவத்தால் உணரலாம். திருமுறை ஒலி அலைகள் நம்மையும் சுற்றுப்புறத்தையும் பாதுகாக்கும். மார்கழி மாதம் காலை, மாலை திருவெம்பாவையும் திருவாதவூரடிகள் புராணம் எல்லோரும் ஓதுவோம். திருமுறைப்பாடல்கள் சிவபெருமானருடைய திருவாயைச் சென்றுசேரும். திருமுறைப்பாக்களைப் பக்தியுடன் பாராயணம் செய்வோரும் பக்கமே நின்று கேட்ட அன்புடன் கேட்போரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து அம்மையே சிவ லோகம் பெறலாம். "ஓம் நமசிவாய"

**க.கு.க.சிவபாலன், சைவபரிபாலன சபை உறுப்பினர்.**

(C-969)

## நூல்கள் வெளியீட்டு நிகழ்வு



(மன்னார்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மன்னாரில் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் அடம்பன் மாந்தை வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் மன்னார் நெருங்கண்டல் கிராம மக்களின் "புனித அந்தோனியார் நாடகம்" மன்னார் இத்திக்கண்டல் சீனிப்புலவர் எழுதிய "புனித செபஸ்தியார் வாசகப்பா", நானாட்டான் பெஞ்சமின் செல்வம் எழுதிய "மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரன்" ஆகிய மூன்று நூல்கள் இவ்வாறு வெளியீடு செய்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அ.ஸ்ரான்லி டி மெல், மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (5-4-285)

# வான்பாயும் வவுனிக்குளத்தை பார்வையிட தடை விதிப்பு

## பொலிஸார் கோரிக்கை





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் குளத்தின் நீர்மட்டம் 26 அடியை கடந்துள்ள நிலையில் குளம் வான் பாய்கிறது.

வான் பாயும் காட்சியை காண்பதற்காக பல மக்கள் அப்பகுதிக்குச் சென்று வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது

கடந்த 19 ஆம் திகதி குறித்த வான் பகுதியை பார்வையிடுவதற்காக வருகைதந்த வாகனமொன்று குளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் நீராடுதல், மீன்பிடித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் தடை விதித்துள்ளது.

இருப்பினும் தற்போது நாட்டில் நிலவுகின்ற கொரோனா அச்சுறுத்தல் மற்றும் இவ்வாறு வான் பாய்கின்ற காட்சிகளை பார்வையிடுவதற்காக வருகை தந்து ஏற்படுகின்ற உயிரிழப்புகள் மற்றும் நோய் தாக்கங்களைக் கருத்தில் கொண்டு குறித்த பகுதிகளுக்கு மக்கள் அநாவசியமாக வருகை தருகின்ற நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-281)

## அனர்த்த அபாய தணிப்பு பயிற்சிப்பட்டறை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனர்த்த காலங்களில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை குறைக்கும் முகமாக சர்வோதயம் நிறுவனத்தினால் USAID/OFDA நிறுவனத்தின் நிதி ஏற்பாட்டில், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஒருங்கிணைப்பில் இரு வருட காலப் பகுதியை கொண்ட அனர்த்த அபாய தணிப்பு நிகழ்ச்சித் திட்டத்துக்கான பயிற்சிப் பட்டறை கடந்த 17 ஆம் திகதி மாவட்ட செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பயிற்சிப்பட்டறை மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் மற்றும் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் இ.இலிங்கேஸ்வரகுமார் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதில் அனர்த்த காலங்களில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை முதல் கட்டமாக இடம்பெற்றது.

இரண்டாம் கட்டமாக அனர்த்த காலங்களில் கிராமங்களில் பணிபுரிகின்ற கிராம மட்ட அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கான பயிற்சிப்பட்டறை இடம்பெற்றது.

இதில் மாவட்டத்தில் அதிகளவான அனர்த்தங்களிற்கு ஆளாகும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த் பயிற்சிப்பட்டறையின் வளவாளர்களாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப்பணிப்பாளர் இ.இலிங்கேஸ்வரகுமார் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் வளவாளர் யூட் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-281)



கிளிநொச்சி சமத்துவக் கட்சியின் இளைஞர் அணியினரின் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் 50 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் குருதிக்கொடை வழங்கினர்.

## மோ.சைக்கிள் - ஆட்டோ விபத்து பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயம்



(தருமபுரம்)

தருமபுரம் வைத்தியசாலைக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் பரந்தன் பகுதியை நோக்கிப் பயணித்த ஆட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் தருமபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-316)

## 12 மரங்களை அகற்றுவதற்கு 4 இலட்சம் கோரும் வனவள திணைக்களம்

(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காஞ்சூர மோட்டை கிராமத்திற்கு மின்சார இணைப்பு வழங்குவதற்கு பிரதேச சபையின் வீதிக்கரைகளில் உள்ள 12 மரங்களை அகற்றுவதற்கு 4 இலட்சம் ரூபாயை வனவளத் திணைக்களம் கோரியுள்ளது.

குறித்த கிராமத்தில் கடந்த 2012 குடியேறிய மக்கள் தமக்கு வனவளத்திணைக்களத்தால் பல்வேறு அட்டூழியங்கள் இடம்பெற்றுவருவதாக தொடர்ந்தும் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தமது கிராமத்திற்கு அருகில் உள்ள மருதோடையில் இருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காஞ்சூர மோட்டைக்கு மின்சார இணைப்பை ஏற்படுத்துவதற்கு மின்கம்பங்களை நாட்டுவதற்கு 12 மரங்கள் தடையாக உள்ளன.

இதனை அகற்றுவதற்கான அனுமதியை வனவளத் திணைக்களம் வழங்கத் தாமதம் ஏற்பட்டது.

இது தொடர்பாக குறித்த கிராம மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் முன்னெடுத்ததுடன் பல்வேறு தரப்பினரிடமும் தமது பிரச்சினையை எடுத்துக் கூறியிருந்தனர்.

தற்போது குறித்த மரங்களை அகற்றுவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் அதற்காக வனவளத் திணைக்களம் 4 இலட்சம் ரூபாயை மரங்களின் மீள்நடுகைக்காக கோரியுள்ளது.

இது தொடர்பாக மின்சார சபையினருக்கு கடிதம் அனுப்பவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னியில் சிங்கள குடியேற்றம் மற்றும் கிரவல் அகழ்வு செயற்பாடுகளிற்காக ஆயிரக் கணக்கிலான ஏக்கர் காடுகள் எந்தவித அனுமதியும் இன்றி அரசினாலும் தனிநபர்களாலும் அழிக்கப்பட்டுவரும் நிலையில் தமிழர்களின் பூர்விக கிராமமான காஞ்சூர மோட்டைக்கு மின்சார இணைப்பினை பெறுவதற்காக 12 மரங்களை அகற்றுவதற்கு வனவளத்திணைக்களம் நான்கு இலட்சத்தை கோருகின்றமை பல்வேறு தரப்புகளிடத்திலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (5-4-299)



வவுனியாவில்முகக்கவசம் அணியாதவர்கள் மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக நேற்று பொலிஸார் கடும் சட்ட நடவடிக்கை எடுத்தனர். (படம்:- சதீஸ்)

## இராசிபலன்

22.12.2020
மார்கழி 07, செவ்வாய்க்கிழமை
அட்டமி முன்னிரவு 9.18 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 4.40 மணிவரை
சுபநேரம் 10.55-12.25 மணிவரை
இராகுகாலம் 3.25-4.55 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூரம்.

வளவன்


மேஷம்

தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.


ரிஷபம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும்.


மிதுனம்

பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.


கடகம்

வெறுத்து ஒதுக்கிய சிலரே உங்களிடம் திரும்பி வந்து உதவி கோரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.


சிம்மம்

உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.


கன்னி

சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பயணங்கள் செல்வதற்காகப்போட்ட முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், நன்மைகள் நடைபெறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம், மகிழ்ச்சி கூடும் நாள்.


தனுசு

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப செலவுகளில் தாரளம் காட்டுவீர்கள்.


மகரம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், போசனசுகமுண்டு.


கும்பம்

ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் குறையும், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


மீனம்

திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதியவர்களின் நட்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது.

**அதிர்ஷ்டம் இல்லையேல் திறமையும் இல்லை.**

# பாடசாலைகள் திறக்கப்படும் திகதியை அறிவித்தார் கல்வி அமைச்சர்

**(கொழும்பு)**

**கற்றல் நடவடிக்கைகளுக்காக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிப் பாடசாலைகள் தவிர ஏனைய பாடசாலைகள் அனைத்தும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் எனக் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளைத் தவிர நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் தரம் 1-5 வரையான மாணவர்களுக்கான கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கையானது ஜனவரி 11 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.



அதேபோன்று முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுளும் ஜனவரி 11 ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (நி-4)

# மதுபானசாலைகளை மூட நடவடிக்கை

(கொழும்பு)

கிறிஸ்மஸ் பண்டிகை மற்றும் புத்தாண்டு காலப்பகுதியில் அனைத்து மதுபானசாலைகளையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவலில் இருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் மதுபானசாலைகள் திறக்கப்படுமானால் மது அருந்துபவர்களின் நடமாட்டம் அதிகரிக்குமெனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக பண்டிகை மற்றும் புத்தாண்டு காலப் பகுதியில் நாட்டில் உள்ள அனைத்து மதுபானசாலைகளையும் மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது. (நி-4)

# வெதுப்பகத்தில் பணிபுரியும் 23 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்பு இரத்மலானையில் அமைந்துள்ள பிரபல வெதுப்பக உணவு தயாரிப்பு நிறுவனத்தில் பணிபுரியும் 23 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இந்த நிறுவனத்தில் பணிப்புரியும் சுமார் 50 பேருக்கு நேற்று நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் 23 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த நிறுவனத்தில் தயாரிக்கப்படும் பேக்கரி உணவு பொருட்கள் பொதி செய்யப்பட்டு பல இடங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிறுவனத்தின் களஞ்சியத்தில் பணிபுரியும் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (நி-4)

# திருமலையில் விகாரைகளை தேடும் பணி தீவிரம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமான புராதன விகாரைகள் மற்றும் தொல்பொருள் தடயங்கள் காணப்படும் இடங்களை முப்படையினர் தேடிவருவதாகத் தெரியவருகின்றது.

மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹதிவுல்வெவ கல்சியம்பலா கந்த என்ற இடத்துக்கு அருகில் புராதன விகாரை ஒன்று சேதமடைந்த நிலையில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

ஆனாலும் அப்பகுதிக்குச் செல்வதற்குப் பாதை இல்லை எனவும் புராதன விகாரை சேதமாக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் இவ்விடத்தைப் பார்வையிடுவதற்காக பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகள் சென்றதாகவும் தெரியவருகின்றது.

குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமான இடங்களை முப்படையினர் தேடி வருவதையும் புராதன இடங்களை இனங்கண்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. (நி-4)

# ஏமாற்றிய வெளிநாட்டவர்கள் ஏமாற்றப்பட்ட நம் நாட்டு பெண்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பெண் ஒருவரை வெளிநாட்டவர்கள் ஏமாற்றி பெருமளவு பணம் மோசடி செய்துள்ளனர்.

குறித்த பெண்ணிடமிருந்து 3 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் நைஜீரியா நாட்டவர்களினால் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து பாதிக்கப்பட்ட பெண் குற்ற விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்போது நைஜீரிய நாட்டவர்களால் பாரிய பணம் மோசடி செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைபேசி ஊடாக இந்த வசதியான பெண்ணுடன் தொடர்பினை ஏற்படுத்திய நைஜீரிய நாட்டவர்கள் அவரை ஏமாற்றி மோசடியான முறையில் பணம் பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த மோசடியாளர்கள் தொடர்பில் அனைத்து தகவல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-4)

கற்க கசடற


ஆரம்பம் - 1929

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

# கிளி/கிளிநொச்சி

# 2020 தரம் 5 புல





# ச்சி மகா வித்தியாலயம்

# மைப்பரிசில் பாராட்டு விழா



சித்தி வீதம் 98%

**இடமிருந்து வலமாக:** திருமதி கு.தவராசா(ஆசிரியர்), திருமதி.ச.நிர்மலரூபன் (ஆசிரியர்), திருமதி வ.பத்மானந்தன் (ஆசிரியர்), திருமதி. ட.இருதயநாதர் (பகுதித் தலைவர்), திருமதி ப.ரவீந்திரன் (பிரதி அதிபர்), திரு.சி.மகேந்திரராசா (பிரதி அதிபர்), திருமதி, ஜெ.தனபாலசிங்கம் (அதிபர்), திரு.பா.ஜெகன் (பிரதி அதிபர்), திருமதி.இ.சுந்தரமூர்த்தி (பிரதி அதிபர்), திருமதி ஜெ.கிருஸ்ணபாகலன் (ஆசிரியை), திருமதி.அ.திருமுருகராசா (ஆசிரியை), திருமதி செ.இராஜபவன் (ஆசிரியை)

**நிரல் 1**
இடமிருந்து வலம்

1. ஜெ.வர்மிகன் - 178
2. சு.ஆதீஸ் - 187
3. பா.நிதுஜெனன் - 179
4. ஐ.டிலக்ஷன் - 165
5. கா. அபிதன் - 175
6. ச.சந்தோஸ் - 163
7. பி.தினூசன் - 194
8. சு.லுதீதன் - 191
9. உ.லவன்யா - 165
10. ஜெ.அனோசன் - 176
11. அ.அவிஸ்னா - 169
12. சு.நிதுர்ஷிகா - 162
13. அ.சுதர்சியா - 173
14. க.மிதுர்ஷிகா - 180
15. சா.தஷானா - 176
16. சு.ரேமிகா - 187
17. பா.வட்சிகா - 179
18. மா.அபிஷானி - 179
19. வி.டிலக்ஷியா- 173
20. க.பிரவீனா - 162

**நிரல் - 2**
இடமிருந்து வலம்

1. வி.தரணிகன் - 162
2. சி.லம்சிகன் - 174
3. செ.சக்தீஸ்வரன் - 181
4. ஜௌ.மூஆத் - 145
5. பி.ஆர்வலன் - 192
6. ற.அட்சரன் - 176
7. பா.பாவரசன் - 171
8. அ.டினோசன் - 164
9. சு.கார்த்தி - 193
10. யு.டருண் - 165
11. கு.ஸரணிகா - 183
12. ர.சாதனா - 175
13. நி.பாவனா - 173
14. சு.கிருத்திகா - 167
15. வ.கேஷாயினி - 194
16. சி.கவிநிலா - 165
17. நா.கயல்நிலா - 185
18. த.தரணிகா - 167
19. இ.அபிநயா - 166
20. வி.டிலக்ஷியா - 173



**நிரல் - 3**
இடமிருந்து வலம்

1. தி.பிருஜன்- 163
2. ர.டன்சிகன்- 168
3. பி.சனோஜன்- 181
4. தெ.லோகிதன்- 161
5. வ.கபிகிருஸ்ணா- 173
6. அ.சானுஜன்- 160
7. ஜெ.பரவசன்- 164
8. சி.சஞ்ஜெய்- 173
9. சு.ஹரிஸ்ணன்- 189
10. ஜெ.ஜனனி- 185
11. க.திபிஷா- 178
12. அ.தமிக்ஷா- 170
13. ச.சஜீவிகா- 169
14. மு.ஶ்ரீதிலக்ஷன்- 171
15. சு.ஹரிஸ்னி- 168
16. இ.அபிராமி- 162
17. ம.தனோபிகா- 169
18. ஜெ.கோபிகா- 163

**நிரல் - 4**
இடமிருந்து வலம்

1. இ.தரணிகன் - 167
2. சு.அகஸ்ரீனா - 186
3. இ.கோகுலவாணி - 167
4. சூ.சரணிகா - 160
5. ஜெ.கவின்சா - 164
6. சி.பவித்திரா - 176
7. இ.ஜிலுஜனா - 167
8. கி.பவிசனா - 177
9. தி.அஸ்வினி - 184
10. ஞா.அக்ஷயா - 182
11. ர.நோமியா - 163
12. ர.டிசன்றிகா - 172
13. ஜெ.அருணிகா - 179
14. ரெ.அபிஷிகா - 186
15. சி.தரணிகா - 185
16. சு.வைஸ்ணவி - 178
17. ம.மதுஷனா - 175
18. கு.நிருஜிகன் - 162

**எமது மாணவர்களுக்கு அறிவூட்டி வரலாற்றுச் சாதனை படைத்த ஆசிரியர்களையும் அதிபர், பிரதி அதிபர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**


**பாராட்டுவோர்:**
**தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களின் பெற்றோர்.**

(C-979)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2020-15.01.2021

## பொறுமையோடு செயற்பட வேண்டிய நேரமிது



சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் 2 ஆம் இடத்தில் நீச்சம் பெற்று சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசியிலேயே புதன், சூரியன் ஆகிய கிரகங்களும் இணைந்திருக்கின்றன. எனவே இம்மாதத்தில் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அடுத்தவர்களை நம்பி பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டாம். பொறுமையோடு செயற்பட வேண்டிய நேரமிது.

### ராகு-கேதுக்களின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 6இல் கேதுவும், 12இல் ராகுவும் இருக்கின்றார்கள். உங்கள் இராசியும், இராசிநாதன் குருவும், ராகு-கேதுக்களின் ஆதிக்கத்திற்குள் அடைபட்டிருக்கின்றன. என்னதான் குருப்பெயர்ச்சியானாலும், இந்த சர்ப்பக் கிரகங்களின் ஆதிக்கம் உங்களுக்கு மன நிம்மதியைக் குறைக்கலாம். எதிர்பாராத விதத்தில் சிக்கல்களும், சிரமங்களும் வந்து சேரலாம். எனவே வரும் பிரச்சினைகளை நல்லவிதமாக முடிவடைய நீங்கள் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

### மகரச் சனி சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசியில் ஜென்மச் சனியாக சஞ்சரித்து வந்த சனி பகவான், டிசெம்பர் 26ஆம் திகதி குடும்பச் சனியாக, அதாவது பாதச் சனியாக மகர இராசிக்கு செல்கின்றார். அங்கு சுமார். இரண்டரை ஆண்டு காலம் வீற்றிருந்து குடும்ப முன்னேற்றத்திற்கு வழி வகுத்துக் கொடுப்பார். வாக்கு, தனம், குடும்பம் ஆகிய வற்றைக் குறிப்பிடும் இடத்திற்கு சனி பகவான் பெயர்ச்சியாகி வருவதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். கொள்கைப்பிடிப் போடு செயற்படுவீர்கள். கடந்த காலத்தில் நடந்த கசப்பான சம்பவங்கள் இனி மாறும். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.




### மகர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசெம்பர் 30 ஆம் திகதி உங்கள் இராசிக்கு இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கப்போகின்றார். களத்திர ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். வாடகை கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் அமைப்பு கைகூடும். வங்கிகளில் அல்லது வள்ளல்களிடம் தொழிலை விரிவுசெய்ய வேண்டுமென்று உதவி கேட்டிருந்தால் அதுவும் கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். சேமிப்புகள் உயரும்.

### தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஜனவரி 5ஆம் திகதி உங்கள் இராசிக்கு வரப்போகின்றார். உங்கள் இராசிநாதன் குருவிற்கு சுக்கிர பகவான் பகைக்கிரகமாக இருந்தாலும், ஆதிபத்ய அடிப்படையில் பார்க்கும் பொழுது நற்பலன்களையே வழங்க வேண்டும். தொழிலில் லாபம் சிறப்பாக கிடைக்கும். அதனைக் கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள். வாங்கிய கடனையும் கொடுத்து நிம்மதி காண்பீர்கள். வெளிநாட்டிலுள்ள உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் அனுகூலமான தகவல் கிடைக்கும். இம்மாதம் வியாழக்கிழமைதோறும் விரதமிருந்து குரு பகவானை வழிபடுவது நல்லது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## செல்வ நிலையும் உயரும்



சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் ஏழரைச் சனியில் விரயச்சனியின் ஆதிக்கத்தில் இருக்கின்றது.

இராசி யிலேயே குரு பகவான் நீச்சம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். குரு பார்வையால் மனக்குழப்பம் அகலும். தனவரவு திருப்தி தரும்.

இம்மாதம் சனிப்பெயர்ச்சி நிகழவிருப்பதால் யோக பலன்கள் உங்களுக்கு வரப்போகின்றது.

ஜென்மச் சனியாக சனி பகவான் வரும் பொழுது கடந்த காலத்தில் ஏற்பட்ட கஷ்டங்களை ஈடுசெய்வார். உங்கள் புது முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். செல்வ நிலையும் உயரும்.

### ராகு-கேதுக்களின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் ராகுவும், இலாப ஸ்தானத்தில் கேதுவும் வீற்றிருக்கின்றார்கள். பஞ்சம ராகுவால் பிள்ளைகள் வழியில் விரயம் ஏற்படலாம். கல்யாணம், மேற்படிப்பு, உத்தியோக வாய்ப்பு போன்றவற்றிற்காக செலவிடும் சூழ்நிலை உண்டு.

கேது பலத்தால் ஆன்மிகப் பயணங்கள் அதிகரிக்கும். ராகு-கேதுக்களின் ஆதிக்கத்திற்குள் உங்கள் இராசியும் அடைபட்டிருக்கின்றது. எனவே பணப்புழக்கம் நன்றாக இருந்தாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். சர்ப்பக் கிரகத்திற்குரிய பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

### மகரச் சனி சஞ்சாரம்

இதுவரை விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், டிசம்பர் 26 ஆம் திகதி உங்கள் இராசிக்குள் அடியெடுத்து வைக்கின்றார். உங்கள் இராசிநாதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் இந்த நேரம், நல்ல நேரம்தான். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் ஆரம்பமாகின்றது. உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கோ உடல்நிலையில் சிறுசிறு தொல்லைகள் வருவதும், மருத்துச் செலவுகளை மேற்கொள்வதும் தவிர்க்க முடியாததாகும். இருப்பினும் தொழில் மற்றும்




உத்தியோகத்தில் எந்த பாதிப்புகளும் ஏற்படாது. உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை வருவதற்கான அறிகுறிகள் தென்படும். மேலதிகாரிகளின் எண்ணங்களை உடனுக்குடன் நிறைவேற்றுவதன் மூலம் அவர்களின் மனதில் இடம் பெறுவீர்கள். தொழில் நடத்துபவர்கள் புதிய ஒப்பந்தங்களால் மகிழ்ச்சி காண்பர். பிள்ளைகளின் திருமணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

### மகர புதன் சஞ்சாரம்


உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசெம்பர் 30ஆம் திகதி உங்கள் இராசிக்கு வருகின்றார். பஞ்சம ஸ்தானாதிபதி விரய ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம், பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படும்.

எனவே பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாகவோ, உத்தியோகம் சம்பந்தமாகவோ நீங்கள் எடுக்கும் முயற்சிகள் கைகூடுவதோடு, கல்யாணம் போன்ற சுப காரியங்களுக்காகவும் செலவிட நேரிடும். பெண்வழிப் பிரச்சினைகள், குறிப்பாக சகோதரிகளின் வாயிலாக ஏற்பட்ட சச்சரவுகள் சுமுகமாக முடியும். 'தொழில் வளம் சிறப்பாக அமைய, தொழில் நடைபெறும் இடத்தை மாற்றலாமா?' என்று யோசிப்பீர்கள்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# உருவாகிறது திருகோணமலை கொத்தணி கொரோனா தொற்றாளர்கள் அதிகரிப்பு



(திருமலை)

திருகோணமலை நகர் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களது எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் திருகோணமலை கொத்தணி உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று 3 ஆவது அலை பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புபட்டு திருகோணமலையில் கணிசமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் நீண்ட நாட்களாக புதிய தொற்றாளர்கள் எவரும் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 21 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக திருகோணமலை கோட்டக் கல்வி வலயத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரும் வரை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் இரவு கிழக்கு மாகாண ஆளுநரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் அக்கரைப்பற்று சந்தை கொத்தணி உருவாகி அம்பாறை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான தொற்றாளர்கள் அடையாளம் கணப்பட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலும் மருதனார்மடம் சந்தைக் கொத்தணி உருவாகி இதுவரை 90 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திருகோணமலையிலும் ஒரே நாளில் 21 புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை திருகோணமலை கொத்தணியின் தோற்றுவாயாக மாறும் அபாய நிலையின் அறிகுறியாகவே நோக்கப்படுகிறது.

ஆகவே பொதுமக்கள் அனைவரும் சுகாதார-பாதுகாப்பு நடைமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலமே இந்த அபாய நிலையை கடந்து செல்ல முடியும் என சுகாதாரத் துறையினர் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஐஸ் உற்பத்தி நிலையத்தில் தீ விபத்து



(கல்முனை)

மட்டக்களப்பில் கைவிடப்பட்ட நிலையிலுள்ள ஐஸ் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு- கல்லடி பாலத்திற்கு அருகில் நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த ஐஸ்தொழிற்சாலையிலேயே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை, தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த ஐஸ் தொழிற்சாலை மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்திற்கு அருகில் 2009ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு செயற்பட்டுவந்த நிலையில், கடந்த 5 வருடத்திற்கு மேலாக கைவிடப்பட்ட நிலையில் இருந்து வருகின்றது.

இங்கு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பாகவும் தீ விபத்து ஏற்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் மாலையும் பலத்த மழைக்கு மத்தியிலும் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ள நிலையில்குறித்த தீயினை மட்டக்களப்பு மாநகரசபையின் தீயணைக்கும் பிரிவினர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

இவ்விடயம் குறித்து மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)



**மத்திய கலாசார நிதியத்தினால சிகிரியா தொல்பொருள் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பேராசிரியர் சேனக பண்டாரநாயக்க தொல்லியல் பயிற்சி பாடசாலை, பிரதமரும், புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.**

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வெற்றியின் ரகசியம்!

சில பேருக்குத் தொட்டதெல்லாம் வெற்றியாக முடியும். சில பேருக்குத் தொட்டதெல்லாம் தோல்வியாக முடியும்.இதிலே உள்ள இரகசியம் என்ன?

அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் இந்தக் கதையைக் கேளுங்கள். ஜப்பானிலே ஒரு பெரிய வீரர் இருந்தார். அவர் பெயர் நொபுநாகா. அவரிடம் இருந்த படை வீரர்கள் கொஞ்ச பேர் தான்.

சிறிய படைப்பலத்தை வைத்துக்கொண்டு பெரிய பெரிய படைகளையெல்லாம் முறியடித்திருக்கின்றார். அவர் அவ்வளவு சாமர்த்தியம் உள்ளவர்.ஒரு தடவை எதிரி மீது படையெடுத்துப் போயிருக்கின்றார். அப்பொழுது அவருடைய படை வீரர்களுக்கும், தளபதிக்கும் ஒரு சந்தேகம் வந்துவிட்டது.

இந்தப் போரிலே நாம் வெற்றிபெற முடியுமா? அப்படி என்பது சந்தேகம்.இருந்தாலும் இதை எப்படி தலைவரிடம் தெரிவிப்பது? மிகவும் யோசனை செய்தார்கள். கடைசியாக கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மெதுவாக கேட்டுவிட்டார்கள். அவர் பார்த்தார்.

சரி..அதை நாம் முடிவு செய்ய வேண்டாம். புத்த விவகாரத்துக்குப் போய்விட்டு வருவோம். பூவா தலையா போட்டுப் பார்ப்போம். என்ன வருதோ அதன் பிரகாரம் செயற்படுவோம். என்ன சொல்கின்றீர்கள்? ஏன் என்றால்...போருக்குச் செல்லும் போது முழு மனசோடு போக வேண்டும்... ஊசலாட்டம் இருக்கக் கூடாது..என்றார்.

தளபதியும் படை வீரர்களும் சரி என்று ஒத்துக் கொண்டார்கள். உடனே அவர்கள் எல்லோரும் அவர்கள் பக்கத்திலே இருந்த கோயிலுக்குப் போனார்கள். தலைவர் உள்ளே போனார். எல்லோரும் ஆவலோடு வெளியிலே காத்துக் கொண்டிருந்தார்கள். நிறைய நேரத்தின் பின்பு அவர் வெளியிலே வந்தார்.

தளபதி-துணைத் தளபதிகள் எல்லோரையும் அருகில் கூப்பிட்டார்.அவர்கள் முன்னிலையில் ஒரு தங்கக் காசை எடுத்தார். இதோ பாருங்கள். இப்பொழுது பூவா-தலையா போட்டுப் பார்க்கலாம். பூ வந்தால் தோற்றுவிடுவோம். தலை வந்தால் ஜெயித்துவிடுவோம். பூ விழுந்தால் போர் வேண்டாம். அதைத் தவிர்த்து விடுவோம். தலை விழுந்தால் போருக்குப் போவோம். விதி இப்பொழுது எங்கள் கையில் தான் இருக்கின்றது. இங்கே என்ன தீர்ப்பு கிடைக்குதோ அதன்படி நடப்போம் என்று சொல்லிவிட்டு தங்கக் காசை கண்டினார்.அது சுழன்று மேலே போய் கணீர் என்று தரையில் விழுந்தது. எல்லோரும் ஆவலோடு அதைக் குனிந்து பார்த்தார்கள். தலை விழுந்திருந்தது.

ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.அதன்பின்பு அவர்களுக்குச் சந்தேகம் வரவில்லை. உறுதியான முடிவோடு போருக்குப் போனார்கள். வெற்றியோடு திரும்பி வந்தார்கள். வெற்றி விழா நடக்கின்றது.

தளபதி பேசினார். இந்த வெற்றியை காசுதான் முடிவு செய்தது. அதனால் விதியை வெல்ல யாரால் முடியும் என்றார். சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.அப்பொழுது அந்தத் தலைவர் தன்னிடம் இருந்த அந்தக் காசை எடுத்து ரகசியமாகத் தளபதியிடம் கொடுத்தார்.

தளபதி அதை வாங்கிப் பார்த்தார். அந்த நாணயத்திலே இரண்டு பக்கமும் தலைதான் இருந்தது. இதிலேயிருந்து என்ன தெரிகின்றது?

வெற்றியின் இரகசியம் என்ன? மன உறுதி தான். எதைச் சொன்னாலும் மனக் குழப்பம் இருக்கக் கூடாது. எண்ணித் துணிக கருமம் இது வள்ளுவர் வாக்கு. பரீட்சை முடிவுகள் வருகின்ற சமயம்.ஒரு பையன் ஒரு காசைச் சுண்டிப் போட்டு தலையா- பூவா பார்த்துக் கொண்டிருந்தான்.

என்ன..பாஸா -பெயிலா-பார்க்கிறியா? என்றேன். பரீட்சை முடிவுகளைப் பொறுத்தவரைக்கும் எனக்குச் சந்தேகமில்லை..சேர்.. என்றான்.பின்பு எதுக்கு..இது? என்றேன். பரீட்சை முடிவு வந்த பின்பு எங்கள் அப்பா.. என்னைத் திட்டுவதோடு விட்டுவிடுவாரா..இல்லை அடிப்பாரா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இது.. என்றான்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

25

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### ஒத்திவைப்புப் பிரேரணைகள் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல்

பாராளுமன்றம் அடுத்துறு அமர்வு தினம் வரை ஒத்திவைக்கப்படும். எனினும், 48 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு ஒத்திவைக் கப்படுகையில், பிரதம அமைச்சர் சபாநாயகரை வேண்டிக்கொள்வதன் மீது பாராளுமன்றத்தை ஒத்திவைக்க இயலும்.

நாளொன்றுக்கான பிரதான அலுவல்கள் முடிவுற்றதும் பாராளுமன்றம் அடுத்துறு தினத்திற்கு ஒத்தி வைக்க முன்னர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றை விவாதிப்பதற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்படுகிறது.

### ஒத்திவைப்புப் பிரேரணைகளின் வகைகள்

வகை 1.அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மீதான விவாதம் (பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 19 ஐப் பார்க்க.)

வகை 2. சபையின் பிரதான அலுவல்கள் முடிவுற்ற பின்னர் "சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை" களுக்காக ஒரு மணி நேரத்தை ஒதுக்குதல். (பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 20 ஐப் பார்க்க.)

வகை 3.பாராளுமன்ற அலுவல் கள் பற்றிய குழுவின் தீர்மானத்திற்கமைய சமர்ப்பிக்க முடியுமான பிரேரண்ணைகள்.

### ஒத்திவைப்புப் பிரேரணைகள் (பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 19)

இத்தகைய ஒத்திவைப்புப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்கையில் அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் சபாநாயகரின் இணக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக எழுத்துமூலமான அறிவித்தலொன்றை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் பாராளுமன்றத்தின் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் அனுமதி கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில், 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து அத்தகைய வேண்டுகோளுக்கு ஒத்திசைவு வழங்குவதன் மீது அத்தகைய பிரேரணையைச் சமர்ப்பிக்க முடியும்.

அவ்வாறு அனுமதி பெற்ற பிரேரணையொன்றை பி.ப. 5.30 மணிக்கு சமர்ப்பிக்க முடியும். ஏதேனும் தினமொன்றில் அத்தகைய பிரேரணை ஒன்றுக்கு மாத்திரம் சமர்ப்பிக்க இடமளிக்கப்படும்.

மேலும், சபாநாயகர் இணக்கம் தெரிவிக்க நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில், அப்பிரேரணையில் அனுமதி வழங்கப்பட்ட பிரிவை சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வாசிப்பதற்கு இடமளிக்கப்படும். நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்களை சபாநாயகர் சபையில் எடுத்தியம்புதல் வேண்டும்.

### ஒத்திவைப்புப் பிரேரணைகள் விதிகளும் நடைமுறைகளும்

பாராளுமன்ற அமர்வின் போது, அத்தினத்திற்கான பிரதான அலுவல்கள் முடிவுறுகையில் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணையொன்றை பாராளுமன்றத்தின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினரொருவரால் சமர்ப்பிக்க முடியும்.

அத்தகைய சபை ஒத்திவைப்பின் போதான பிரேரணைக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்படுவதுடன், அது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகவிருத்தலும் வேண்டும்.

சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணையின் மீது கேள்விகளைக் கேட்பதற்கும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளில் ஏற்பாடுகள் உள்ளன.

அத்தகைய பிரேரணையொன்று அல்லது கேள்விகள் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமையாவிடின் அதற்கு சபாநாயகர் இடமளிக்காதிருக்க முடியும்.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பற்றிய விவாத காலத்தில் சபை ஒத்திவைப்பின் போதான பிரேரணையொன்று அல்லது சபை ஒத்திவைப்பின் போதான கேள்விகளுக்கு 30 நிமிடங்கள் மாத்திரம் ஒதுக்கப்படும்.

சபை ஒத்திவைப்பின் போதான பிரேரணையொன்றை சமர்ப்பிக்க எதிர்பார்க்கும் பாராளுமன்ற உறுப்பினரால் அரசாங்கக் கட்சியின் பிரதான முதற்கோலாசான் அல்லது எதிர்க்கட்சியின் பிரதான முதற்கோலாசான் ஊடாக அதற்கு முந்திய தினம் ந.ப. 12.00 மணிக்கு முன்னர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் அதன் பிரதியொன்றை ஏற்புடைய அமைச்சுக்கு ஆற்றுப்படுத்துவதற்காக பாராளுமன்றச் சபை முதல்வருக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

எனினும், அத்தகைய பிரேரணையில் அடங்கியுள்ள விடயங்கள் நீதிமன்றமொன்றின் தீர்ப்புக்குள்ளாகவுள்ள அல்லது பாராளுமன்றத்தில் ஒரே கூட்டத்தொடரில் அதேபோன்ற பிரேரணையொன்று விவாதிக்கப்பட்டிருப்பின் அதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

எவரேனும் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபை ஒத்திவைப்பின் போதான பிரேரணையொன்றைச் சமர்பிக்கும் போது வேறொரு பாராளுமன்ற உறுப்பினரால் வழிமொழியப்படுதல் வேண்டுமென்பதுடன், விவாத இறுதியில் ஏற்புடைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் அதற்கு விடையளிக்கப்படுவதுடன், விவாதத்தின் போது அரசாங்கக் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என்பவற்றின் பொருட்டு 30 நிமிடங்கள் வீதம் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.சபை ஒத்திவைப்பின் போதான விவாதம் பற்றிய வாக்கெடுப்புக்கான சந்தர்ப்பம் இல்லை.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் இணக்கப்பாட்டுக்கமைய விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப்படும் ஒத்திவைப்புப் பிரேரணை

அரசியற் கட்சித் தலைவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளால் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் தீர்மானத்தின் பொருட்டு, தினம் மற்றும் நேரத்தைக் குறிப்பிட்டுக் கொண்ட பின்னர், ஒரு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு அல்லது முழு நாள் விவாதம் ஒன்றை ஒதுக்கி ஒத்திவைப்பு விவாதமொன்றை நடத்த முடியும்.

### ஒத்திவைப்பு பிரேரணைகளின் உபயோகம்

பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினரொருவருக்கு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த குறிப்பிட்டதொரு விடயம் தொடர்பாக குறுகிய அறிவித்தலுடன் பாராளுமன்றத்தினதும் ஏற்புடைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் கவனத்தை ஈர்க்கும் வழிமுறையொன்றாகும்.

### ஒத்திவைப்புப் பிரேரணைகள் விதிகளும் நடைமுறைகளும்

பாராளுமன்ற அமர்வின் போது, அத்தினத்திற்கான பிரதான அலுவல்கள் முடிவுறுகையில் சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணையொன்றை பாராளுமன்றத்தின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினரொருவரால் சமர்ப்பிக்க முடியும்.

அத்தகைய சபை ஒத்திவைப்பின் போதான பிரேரணைக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்படுவதுடன், அது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகவிருத்தலும் வேண்டும். சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணையின் மீது கேள்விகளைக் கேட்பதற்கும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளில் ஏற்பாடுகள் உள்ளன.

அத்தகைய பிரேரணையொன்று அல்லது கேள்விகள் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமையாவிடின் அதற்கு சபாநாயகர் இடமளிக்காதிருக்க முடியும்.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பற்றிய விவாத காலத்தில் சபை ஒத்திவைப்பின் போதான பிரேரணையொன்று அல்லது சபை ஒத்திவைப்பின் போதான கேள்விகளுக்கு 30 நிமிடங்கள் மாத்திரம் ஒதுக்கப்படும்.

சபை ஒத்திவைப்பின் போதான பிரேரணையொன்றை சமர்ப்பிக்க எதிர்பார்க்கும் பாராளுமன்ற உறுப்பினரால் அரசாங்கக் கட்சியின் பிரதான முதற்கோலாசான் அல்லது எதிர்க் கட்சியின் பிரதான முதற்கோலாசான் ஊடாக அதற்கு முந்திய தினம் ந.ப. 12.00 மணிக்கு முன்னர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் அதன் பிரதியொன்றை ஏற்புடைய அமைச்சுக்கு ஆற்றுப்படுத்துவதற்காக பாராளுமன்றச் சபை முதல்வருக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

எனினும், அத்தகைய பிரேரணையில் அடங்கியுள்ள விடயங்கள் நீதிமன்றமொன்றின் தீர்ப்புக்குள்ளாகவுள்ள அல்லது பாராளுமன்றத்தில் ஒரே கூட்டத்தொடரில் அதேபோன்ற பிரேரணையொன்று விவாதிக்கப்பட்டிருப்பின் அதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

எவரேனும் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபை ஒத்திவைப்பின் போதான பிரேரணையொன்றைச் சமர்பிக்கும் போது வேறொரு பாராளுமன்ற உறுப்பினரால் வழிமொழியப்படுதல் வேண்டுமென்பதுடன், விவாத இறுதியில் ஏற்புடைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் அதற்கு விடையளிக்கப்படுவதுடன், விவாதத்தின் போது அரசாங்கக் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என்பவற்றின் பொருட்டு 30 நிமிடங்கள் வீதம் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும்.

சபை ஒத்திவைப்பின் போதான விவாதம் பற்றிய வாக்கெடுப்புக்கான சந்தர்ப்பம் இல்லை.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் இணக்கப்பாட்டுக்கமைய விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப்படும் ஒத்திவைப்புப் பிரேரணை

அரசியற் கட்சித் தலைவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளால் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் தீர்மானத்தின் பொருட்டு, தினம் மற்றும் நேரத்தைக் குறிப்பிட்டுக் கொண்ட பின்னர், ஒரு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு அல்லது முழு நாள் விவாதம் ஒன்றை ஒதுக்கி ஒத்திவைப்பு விவாதமொன்றை நடத்த முடியும்.

### ஒத்திவைப்பு பிரேரணைகளின் உபயோகம்

பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினரொருவருக்கு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த குறிப்பிட்டதொரு விடயம் தொடர்பாக குறுகிய அறிவித்தலுடன் பாராளுமன்றத்தினதும் ஏற்புடைய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் கவனத்தை ஈர்க்கும் வழிமுறையொன்றாகும்.

(தொடரும்...)

# கொரோனா உயிரிழப்புகள் ஜனவரியில் அதிகரிக்கும்

## எச்சரிக்கை விடுக்கும் அரச மருத்துவ சங்கம்

**(கொழும்பு)**

**ஜனவரி மாதத்தில் நாட்டில் கொரோனா வைரஸினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இதன் காரணமாக முதியோர் இல்லங்களை உரிய முறையில் நிர்வகிப்பதுடன் முதியோர் இல்லங்களில் வைரஸ் பரவுவதைத் தடுக்கவேண்டும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன் – எதற்கு – எப்படி



## வாழ்வை பிரகாசமாக்கும் தீபாராதனை

(தொடர்ச்சி)

நெருப்பில் போடப்படும் எந்தப் பொருளும் எரிந்து ஒன்றும் இல்லாமல் போய் விடும். அதுபோல தீபாராதனையை கண்டு வழிபட்டால் நமது இன்னல்கள் எல்லாம் எரிந்து ஒன்றும் இல்லாமல் போய் விடும் என்பது அர்த்தமாகும்.

நம் மனம் எதுவும் இல்லாமல் வெறுமையாக இருந்தால் தான் பிரமத்தோடு இணைந்து பிரம்மம் ஆக முடியும். இதை நமக்கு உணர்த்தவே ஆலயங்களில் கற்பூர தீபம் காட்டப்படுகின்றது.

கற்பூரம் எரிய எரிய தன்னை முற்றிலும் அழித்துக் கொண்டு வீசுகின்றது. அதுபோல இறை ஒளியில் நம்மை பூரணமாக கரைத்துக் கொண்டு விடவேண்டும்.

கற்பூர தீபம் போல தீப வழிபாட்டில் பல வகைகள் உள்ளன. ஒரு முக தீபம், அடுக்குத்தீபம், பஞ்சமுக தீபம், வில்ப தீபம், நட்சத்திர தீபம், கும்ப தீபம் என்று தீப வகைகளை சொல்லிக்கொண்டே போகலாம்.

சில ஆலயங்களில் 7 அல்லது 9 வகைத் தீபம் காட்டுவார்கள். ஆனால் பழைமையான ஆலயங்களில் பதினாறு வகை தீபங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1.தூபம், 2.மகா தீபம், 3.அலங்கார தீபம், 4.நாக தீபம், 5.விருட்ச தீபம், 6.புருஷாமிருக தீபம், 7.ஓல தீபம், 8.கமபதி தீபம், 9.கஜ தீபம், 10.வியாக்ர தீபம், 11.சிம்ம தீபம், 12.துவஜ தீபம், 13.மயூர தீபம், 14.ஐந்தட்டு பூரண தீபம், 15.நட்சத்திர தீபம், 16.மேரு தீபம் என்று 16 வகை தீபத்தை வகைப்படுத்தியுள்ளனர்.

இதில் 9 தீபங்கள் என்பது நவசக்திகளையும் 7 தீபங்கள் சப்த மாதர்களையும் பஞ்ச தீபங்கள் பஞ்ச பூதங்களையும் குறிக்கும். மூன்று தீபங்கள் என்பது சூரியன், சந்திரன் மற்றும் அக்கினியைக் குறிக்கும்.

ஒரு தீபம் ஏற்றுவது இறைவன் ஒருவனே என்பதையும் கலைமகளையும் குறிக்கும். இறுதியில் கும்பதீபம் காட்டுவார்கள். இந்த கும்பதீபம் சதாசிவ தத்துவத்தைக் குறிக்கிறது. அதாவது கும்பத்துக்குள் அனைத்தும் அடங்கும் என்பதை இது காட்டுகின்றது.

ஆலயத்தில் பூஜைகள் தொடங்கும் போது அபிஷேகம் செய்து முடித்ததும் அர்ச்சனை செய்து முடித்ததும் நெய் கலந்த தீபம் ஏற்ற வேண்டும். நெய் இல்லாவிட்டால் நல்லெண்ணெய் எடுத்துக் கொண்டு கற்பூரத்தை அதனோடு சேர்த்து அந்தக் கலவையில திரியை நனைத்து அதை கொண்டு தீபம் ஏற்ற வேண்டும்.

ஒவ்வொரு தீபத்துக்கும் ஒரு தேவதை, அதி தேவதை உண்டு. அந்த தீபங்களை காட்டும் போது அந்த தேவதைகளுக்கு உரிய மந்திரத்தை சொல்ல வேண்டும். ஒரு வேளை 16 வகை தீப தேவைகளுக்கான மந்திரம் தெரியாவிட்டால், மூலவருக்குரிய மூல மந்திரத்தை சொல்லலாம்.

தீபாராதனை முடிந்ததும் சுவாமிக்கு மங்கள திரவியங்களான கண்ணாடி, குடை, சாமரம், தாள விருத்தம், மயில் தோகை, விசிறி, சிதவாதம், கற்பூரம் காட்டி பூஜையை நிறைவு செய்ய வேண்டும்.

சுவாமிக்கு காட்டப்படும் கண்ணாடி சிவசக்தி வடிவமாகக் கருதப்படுகிறது. அதன் ஒளி சிவமாகும். கண்ணாடி உபசாரம் செய்வதால் சிவலோகப் பாக்கியம் உண்டாகும்.

கண்ணாடி காட்டி முடிந்ததும் சுவாமிக்கு குடை காட்டுவார்கள். இதை வழிபாடு செய்தால் நூற்றுக்கணக்கான சித்திர விமானங்களோடு நீண்ட காலம் சிவபுரத்தில் இருப்பார்கள்.

இதைத்தொடர்ந்து சாமரம் வீசி உபசாரம் செய்தால் கன்னியர்கள் புடைசூழ தேவ விமானத்தில் நீண்ட காலம் இருப்பார்கள்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## போதைப் பொருட்களுடன் இவ்வருடம் 61,300 பேர் கைது

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஹெரோயின், கஞ்சா மற்றும் ஐஸ் ரக போதைப்பொருள்களுடன் 61,300 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 1605 கிலோ கிராம் ஹெரோயினும் 13,896 கிலோ கிராம் கஞ்சாவும் 802 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (நி-4)

## பாம்பு தீண்டி குழந்தை உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- கட்டுமுறிவு குளத்தில் வசிக்கும் ரவீந்திரன் கிருஸ்டிக்கா (வயது-4) என்ற குழந்தை, விஷப்பாம்பு கடித்தமை காரணமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அடிப்படை வசதிகள் அற்ற ஒரு குடிசை வீட்டில் குறித்த குடும்பத்தினர் வசித்து வந்த நிலையில், நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் விஷப்பாம்பு குழந்தையை கடித்துள் ளதை பெற்றோர் அறிந்த நிலையில், 20 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கதிரவெளி வைத்தியசாலைக்கு தன்னுடைய மகளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் குறித்த குழந்தை உயிரிழந்துள்ளதாக உறவினர் தெரிவித்தனர். விஷப்பாம்பு, காட்டு யானை தாக்குதல், காட்டு மிருகங்கள் தாக்குதல் என்பன இடம்பெற்றாலும் சிகிச்சை பெறுவதற்கு பல சிரமத்தின் மத்தியில் 20 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கதிரவெளி வைத்தியசாலைக்கு வர வேண்டிய நிலைமை உள்ளது. (நி-4)

## 11 இலட்சத்தை அண்மித்தது பி.சி.ஆர்.பரிசோதனைகள்

(கொழும்பு)

கொவிட்-19 நோயாளிகளை அடையாளம் காண நேற்று முன்தினம் மாத்திரம் நாட்டில் 10,534 பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் இலங்கையில் மொத்தம் 11 இலட்சத்து 13 ஆயிரத்து 199 பி.சி.ஆர்.சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## நீராடச் சென்ற இளைஞன் சடலமாக மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு-கரடியனாறு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மரப்பாலம் குளத்தில் நீராடச் சென்ற இளைஞர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

சுவிஸ் கிராமத்தைச் சேர்ந்த 19 வயதுடைய அன்ரன்ராஜ் விதுசன் என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு சுவிஸ் கிராமத்தில் இருந்து மரப்பாலத்திலுள்ள தனது உறவினர் வீட்டிற்குச் சென்ற இளைஞர், நேற்று முன்தினம் மாலை மரப்பாலம் குளத்தில் குளிக்க சென்ற வேளை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

## மஞ்சளுடன் நபர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த உலர்ந்த மஞ்சள் 1,950 கிலோ கிராம் 420 கிராமுடன் நபரொருவர் மட்டக்குளிய - களனி கஹமோல வீதியில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரகசியமாக கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமையவே நேற்று முன்தினம் இடம்பெற்ற சுற்றி வளைப்பின்போது இம் மஞ்சள் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மட்டக்குளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## கோழிக்குஞ்சு சூப்



முல்லாவின் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒரு பெண் மணி வசித்து வந்தாள். முல்லா வீட்டில் என்ன சமையல் செய்தாலும் அவள் அதை மோப்பம் பிடித்து தனது சிறிய மகளை அனுப்பி சமைத்த பொருளை கொஞ்சம் கேட்டு வாங்கி வரச் சொல்வாள்.

ஒருநாள் முல்லாவுக்கு கோழிக்குஞ்சு சூப் சாப்பிட வேண்டும் என்று ஆசையாக இருந்தது.

அதனால் தன் மனைவியிடம் சூப் தயார் செய்யச் சொல்லலாம் என்று மனதில் நினைத்துக்கொண்டே மனைவியை அழைத்தார்.

மனைவி அருகில் வந்தவுடன்தான் முல்லாவுக்கு அண்டை வீட்டுக்காரியின் நினைவுவந்தது.

அண்டை வீட்டுக்காரி மோப்பம் பிடித்துக் கொண்டு சூப் வாங்க ஆள் அனுப்பி விடுவாளே என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டு சூப் இப்போது தயார்செய்ய வேண்டாம் என்று கூறி மனைவியை அனுப்பி விட்டார்.

சற்று நேரத்தில் கதவை யாரோ தட்டுகின்ற ஓசை கேட்டு முல்லா எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்தார்.

அண்டை வீட்டுக்காரியின் சின்னப் பெண் கையில் ஒரு கிண்ணத்துடன் வீட்டு வாசலில் வந்து நின்றாள். எதற்காக அந்தச் சின்னப் பெண் வந்திருக்கிறாள் என்று விசாரித்தார் முல்லா.

உங்கள் வீட்டில் கோழி சூப் தயாரித்தீர்களாமே! அம்மா கொஞ்சம் வாங்கிக் கொண்டு வரச்சொன்னார் என்று சிறுமி கூறினாள்.

முல்லா உரத்த குரலில் ஹா ஹா ஹா என்று சிரித்ததைக் கேட்டு மனைவி ஓடி வந்து "ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"இந்த விநோதத்தைப் பார்?" இத்தனை காலமாக நாம் சமையல் செய்யும் போதுதான் அண்டை வீட்டுக்காரி மோப்பம் பிடித்து நாம் சமைக்கும் பொருளில் கொஞ்சம் வாங்கி வரச் சொல்லுவாள்.


நான் உன்னிடம் சூப் செய்யச் சொல்லலாம் என்று மனத்திலே நினைத்ததைக் கூட அண்டை வீட்டுக்காரி மோப்பம் பிடித்து சூப் வாங்கி வரச் சொல்லி மகளை அனுப்பியிருக்கிறாள் பார் என்று கூறிமுல்லா சிரிக்கலானார்.

**நீதி: பக்கத்து வீட்டுச் சுவற்றுக்குக்கூட காது இருக்கும் என்பது உண்மையாகிறது.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?

**62**



குதிரை வீரர்கள் பயன்படுத்துவதற்கென்றே பைக் (Pike) என்கின்ற ஆயுதம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

நீண்ட ஈட்டியின் கழுத்துப் பகுதியில் கோடரியையும் இணைத்தால் எப்படி இருக்குமோ, அதுதான் பைக், சில சமயங்களில் வெறும் ஈட்டியையும் பயன்படுத்தினர். ஆனால் அவை எடை குறைந்தவை. அடுத்து காலாட்படை.

எண்ணிக்கை அளவில் மிகப்பெரிய படை இதுதான். அத்தனை பேரும் மிகச் சிறந்த வீரர்கள். இவர்களைத் தேர்வு செய்வது, பயிற்சி அளிப்பது எல்லாமே தினசரி நடவடிக்கைகளாக நடைபெறக் கூடியவை. உடல்பலம்.

வாள்வீசும் திறன். ஈட்டியெறியும் திறன். எல்லாமே நீண்டகால அடிப்படையில் அவர்களுக்குப் பயிற்சி தரப்பட்டு, யுத்தகளங்களுக்கு அனுப்பப்பட்டார்கள்.

பெஸடைரோய் (Pezhetairoi) என்பது காலாட்படையில் தரப்படும் உயரிய அந்தஸ்து. காலாட்படை வீரர்களை மாத்திரம் ஒட்டுமொத்தமாக யுத்தகளத்திற்கு அனுப்பிவிடமாட்டார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக. நிலைமையின் வீரியத்திற்கு ஏற்றபடி அனுப்புவார்கள். காலாட்படையில் பயன்படுத்தப்படும் யுக்திகளுள் இதுவும் ஒன்று.

பிரத்யேகப் பயிற்சிகள் எல்லாமே கடுமையானவை. யுத்தம் தொடங்கும் போது எப்படி இயங்கவேண்டும்? எதிரிகள் பலத்தோடு இருக்கும்போது எப்படி இயங்க வேண்டும்? பலவீனமாக இருந்தால் அதை சாதகமாக்கிக்கொள்ள என்ன செய்ய வேண்டும்? இப்படி போர் யுக்திகள் ஒவ்வொன்றும் அவர்களுக்குச் சொல்லித் தரப்பட்டன.

காலாட்படை வீரர்கள் கண்டிப்பாக தலை மற்றும் உடற்கவசங்கள் அணிந்து கொள்ள வேண்டும்.

கோடை காலங்களில் அந்த உடற்கவசத்தை அணிவதற்குச் சிரமமாக இருக்கும். சிலர் அதைப் பொருட்படுத்தாமல் அணிந்து கொள்வார்கள். சிலர் இடையூறாக இருப்பதாகக் கருதி அவற்றை அணியாமல் தவிர்த்து விடுவார்கள்.

இதைத் தெரிந்துகொண்ட அலெக்சாண்டர், கோடைக்காலத்திலும் அணிந்து கொள்வதற்கு வசதியாக உடற்கவசங்களைத் தயார் செய்ய உத்தரவிட்டிருந்தார். அலெக்சாண்டரின் படையில் முக்கியமான அங்கம் தெஸ்ஸாலிய குதிரைப்படை. மாசிடோனிய மன்னர்தான் அவர்களுடைய இராணுவ தலைவர்.

(தொடரும்)

இடுக்கண் வருமின்
அஞ்சாமல் வெல்லுவீர்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தலைநிமிர்வது விதியாயின் ஆட்சியில் யார் இருந்தால் என்ன?

இலங்கை வேந்தன் இராவணேஸ்வரனின் அழிவு எப்போது தீர்மானிக்கப்பட்டது என்பதை எடுத்துரைத்த கம்பர்;

"…. அருந்துயில் துறந்த ஜயனைக் கண்டனள் தன் கிளைக்கு இறுகி காணுவாள்" என்பார்.

இராமபிரானை சூர்ப்பனகை என்று கண்டாளோ அன்றைக்கு இராவணனுக்கும் அவனது கிளைக்கும் இறுதியாயிற்று.

ஆம், இலங்கை வேந்தன் இராவணனுக்கு இந்திரசித்து பிறக்கப் போகின்றான்

இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் தன் மகன் இந்திரசித்து ஆள வேண்டும் என விரும்பிய இராவணன், அதற்காக கிரகங்களை எங்கெங்கு நிறுத்த வேண்டும் என்பதை தீர்மானிக்க நாரதரிடம் ஆலோசனை பெறுகின்றான்.

இராவணா! உன் சிம்மாசனத்தின் படிகளில் நவக்கிரகங்களையும் குப்புறக் கிடத்தி அவர்களை மிதித்துச் செல்கிறாய்.

எட்டாம் இடத்தில் சனி பகவான் உள்ளார். அவரை மல்லாக்காகக் கிடத்தி மிதித்தால் உன் மகன் இந்திரசித்து லோகங்கள் முழுவதையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பான் எனக் கூறுகிறார்.

நாரதர் கூறியதன் பிரகாரம், எட்டாம் படியில் குப்புறக் கிடந்த சனீஸ்வரனை மல்லாக்காகப்படுத்திய இராவணன், அவரைக் காலால் மிதித்தபோது சனி பகவான் இராவணனைப் பார்த்து விடுகிறார்.

அவ்வளவுதான் அட்டமத்துச் சனீஸ்வரனின் பார்வை இராவணனையும் அவன் வம்சத்தையும் அழித்தது என்பது கதை.

ஆக, ஒரு மனிதனைக் கேடு சூழ்வது விதியாயிற்று எனில், அது எந்த வடிவத்திலும் வந்து சேரும்.

அன்னை இந்திராகாந்தியைச் சுட்டுக் கொன்றவன் அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர். முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச தன் மரணத்தை தானே கைகாட்டி அழைத்துக் கொண்டார். தமிழகத்து முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா தன் பக்கத்துணை என்று கருதிய சசிகலாவே அவருக்கு மாரகமானார்.

ஜெயலலிதாவுக்குப் பின்னர் தான் இட்டதே சட்டம் என்றிருந்தபோது, சிறைத்தண்டனை சசிகலாவை வந்தடைந்தது.

இதுபோல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ தன்னைச் சுட்டிக்காட்டவல்லவரை தானே அழைத்து வந்தது. இதுதான் விதி.

இதைநாம் கூறும்போது என்ன சங்கதி என்று உங்களில் பலர் நெற்றிப் புருவத்தை உயர்த்திக் கொள்ளலாம். இதற்குள்ளும் விதி விளையாடலாம் என்பதற்காகவே மேற்போந்த விடயம்.

ஆம், கொரோனாக் காலத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்து, கொரோனாக் காலத்தில் பொதுத் தேர்தலை நடத்தி, இவர்கள் ஆட்சிப் பீடம் ஏறினால்தான் நம் பௌத்த சிங்களம் தலையெடுக்கும் என்றெண்ணி; அவர் தம் குடும்பத்தாரை அரியணையில் இருத்தி, சிங்கள மக்கள் அழகு பார்க்க,

நிலைமை வேறு விதமாகவும் போகலாம். தமிழர்கள் தலைநிமிர்வது இனி விதி என்றால்..

## கிளிநொச்சி சந்தை எதிர்வரும் நாட்களில் திறப்பதற்கு நடவடிக்கை

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பொது சந்தைகளை சுகாதார நடைமுறைகளுடன் திறப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ந.திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் பிராந்திய சுகாதார சேவையினர், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள், பொலிஸார், இராணுவத்தினர், சந்தை வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மொத்த சந்தை தொகுதியை தனியாகவும், சில்லறை வர்த்தக நடவடிக்கைகளைச் சந்தை வளாகத்தின் வெளிப்பகுதியிலும் நடத்துவதற்கும் ஆலோசிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டது.

எந்தவொரு வாகனத்தையும் சந்தை உட்பகுதிக்குள் அனுமதிப்பதில்லை எனவும், சந்தை வெளிப்பகுதியில் நிறுத்தவும் சுகாதார தரப்பும், பிரதேச சபையினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதேவேளை சந்தைத் தொகுதியின் இரு பிரதான வாயில்களை மாத்திரம் திறக்கவும். ஒருவழிப் பாதையாக பயன்படுத்தவும் இரு தரப்பாலும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்கவும் சுகாதார தரப்பு அறிவுறுத்தியுள்ளது.

நேற்று ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தை வடமாகாண ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு சென்று எதிர்வரும் நாட்களில் தீர்மானம் எடுக்கப்படும் என மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ந.திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார். (5-100)

## கோப்பாயில் விபத்து; நால்வர் படுகாயம்

(கோப்பாய்)

கைதடி-கோப்பாய் வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம், கைதடி மானிப்பாய் வீதியில் உள்ள சரஸ்வதி சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் கைதடி நோக்கி மூவர் பயணித்துள்ளனர், அதே திசையில் துவிச்சக்கர வண்டியில் வயோதிபர் ஒருவர் பயணித்த நிலையில், வலப்புறமாக திருப்ப முற்பட்ட வேளை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரும், சைக்கிளில் பயணித்த வயோதிபருமாக நால்வர் படுகாயங்களுக்குள்ளாகி உள்ளனர். (ம-3)

## நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டோர் வெளியேற்றப்பட்டனர்

(கரணவாய்)

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் வெளியேற்றப்பட்டனர்.

வெளிமாவட்டங்களிலிருந்து வந்த சில வியாபாரிகள் குறித்த பகுதிகளில் நடமாடும் வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

இந்நடவடிக்கை தொடர்பில் அப்பகுதி மக்களும் வர்த்தக சங்கத்தினரும் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

அதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அவர்களை அவ் விடத்தைவிட்டு அகற்றினர். (5-4-60)



## சிதம்பர தரிசனம்

ஈழத்துச் சிதம்பரத்தில் (2020.12.22) திருவெம்பாவை 2ஆம் நாள்

### எழுந்தோடி வாடி தோழி ஈசன் புகழ்பாட

ஆதிரையான் பெருமைதனை ஆரறிவார் தோழி
அரவணிந்தோன் புகழ்பாட யார்வருவார் தோழி
மாதவளை பாகம் வைத்தோன் மகிமைதனைச் சொல்ல
மாணிக்கவாசகர் புகழ்ந்த புதுமையெலாம் பேச
தீக்கரத்தான் புலியுடையான் செம்மை நலம் காண
திருச்சடையில் கங்கைதனை வைத்தவனைப் பாட
ஈழத்துச் சிதம்பரனை திருவெம்பாவையில் காண
எழுந்தோடி எல்லோரையும் அழைத்திங்கே வாடி

செந்நாப்புலவர் மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

## ஹோமம்

நல்லூர் ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தானத்தில் மஹா மிருத்யுஞ்ஜய ஹோமம் நடைபெறவுள்ளது.

இவ் யாகம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, இந்துசமயகலாசாரதிணைக்களத்தின் ஏற்பாட்டில் நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை உலக மக்கள் அனைவரினதும் நலம் கருதி இவ்வழிபாடு இடம்பெறவுள்ளது. (5)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### உலகத்தை காலடியில் வைக்க

❖ பிறருடைய தவறைக் காண முயற்சிக்காமல், உங்களுடைய தவறை திருத்திக் கொள்ளுங்கள்.

❖ பொறாமை, ஆணவம் ஆகியவற்றைத்தூக்கி எறிந்து விட்டு, உன் முழு வலிமையுடனும், அளவற்ற ஆர்வத்துடனும், தொழிற்களத்தில் இறங்கினால் இறைவன் நல்வழி காட்டுவான்.

❖ தெளிந்த உண்மையும், கருத்துத் தூய்மையும் மனிதனுக்கு உறுதியான வெற்றியைத் தரும்.

❖ ஒவ்வொரு உயிரிலும் தெய்வத்தன்மை இருக்கிறது, உள்ளேயும், வெளியேயும் இருக்கும் உணர்வுகளைக்கட்டுப்படுத்தி, உள்ளத்தில் குடிகொண்டுள்ள தெய்வத்தன்மையை மலரச் செய்வது தான் ஒருவருக்கு லட்சியமாக இருக்கவேண்டும்.

❖ அனைத்தையும் பொறுப்பவளாக இருக்கும் பூமிதேவியைப் போன்று, நீங்களும் பொறுமையுடன் இருந்தால் உலகமே உங்கள் காலடியில் அமரும்.

❖ நம்பிக்கை.. உன்னிடம் நம்பிக்கை கடவுளிடத்தில் நம்பிக்கை... இதுவே வெற்றி பெறுவதின் ரகசியம்.

❖ துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் தெய்வீக இயல்பு நம்மிடம் வெளிப்படும்.

# புதிய வகை கொரோனா வைரஸால் பிரித்தானியா முழுவதும் பரபரப்பு

## பயணத்தடை விதித்த ஐரோப்பிய நாடுகள்

**(லண்டன்)**

**பிரித்தானியாவில் பரவி வரும் புதிய வகை கொரோனா வைரஸ் காரணமாக ஏனைய ஐரோப்பிய நாடுகள் முழுவதும் பிரித்தானியாவுடனான விமானப் போக்குவரத்திற்கு தடை விதித்துள்ளன.**



கடந்த சில நாட்களாக பிரித்தானியாவில் கொரோனாப் பரவல் வேகம் புதிய உச்சத்தை தொட்டது. தினமும் 60 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனால் வைரஸ் இந்த அளவிற்கு வேகமாக பரவ என்ன காரணம் என்பது குறித்து பிரித்தானிய ஆய்வாளர்கள் நடத்திய ஆராய்ச்சியில், தற்போதைய கொரோனா வைரஸ் முந்தைய கொரோனா வைரஸைவிட வித்தியாசமானதாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதாவது கொரோனா வைரஸ் சூழ்நிலைக்கு ஏற்றார்போல வளர்சிதை மாற்றம் அடைந்திருந்ததை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

இந்த புதிய வகை கொரோனா வைரஸ் பழைய வைரஸின் பாதிப்பு சக்தியைக் கொண்டிருந்த போதும் அதன் பரவும் வேகம் மிகவும் அதிகளவில் இருந்தது.

அதாவது, பழைய கொரோனா வைரஸை காட்டிலும் இந்தப் புதிய கொரோனா வைரஸ் வேகமாக பரவும் தன்மை உடையதாக உள்ளது.


கொரோனா வைரஸ் வளர்சிதை மாற்றம் அடைந்து புதியவகை கொரோனா வைரஸாக மாற்றமடைந்து வேகமாக பரவி வருவதால் ஐரோப்பிய நாடுகள் பிரித்தானியாவுடனான விமானப் போக்குவரத்திற்கு தடை விதித்துள்ளன.

இந்தத் தடை நேற்று முதல் உடனடியாக அமுலுக்கு வருவதாக ஐரோப்பிய நாடுகள் தெரிவித்துள்ளன.

மேலும், வேகமாகப் பரவி வரும் புதிய வகை கொரோனா வைரஸ் மாறுபாடு குறித்து விவாதிக்க அந்நாட்டு சுகாதார அமைச்சகம் அதன் கூட்டுக் கண்காணிப்புக் குழுவுடன் இன்று ஆலோசனை நடத்தவுள்ளது. (4)

# விவசாயிகள் உயிரிழப்புக்கு மோடியே பொறுப்பு

## முதலமைச்சர் தெரிவிப்பு



(டில்லி)

மத்திய அரசு கொண்டு வந்துள்ள வேளாண் சட்டங்களை எதிர்த்து டில்லியில் விவசாயிகள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்தில் பங்கேற்று உயிரிழந்த 36 விவசாயிகளுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதலமைச்சர் நாராயணசாமி தெரிவிக்கையில்,

வேளாண் சட்டங்களுக்கு எதிராக தொடர்ந்து போராட்டம் நடத்தி வரும் விவசாயிகளிடம் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்தாமல், பெரிய தொழிலதிபர்கள், முதலாளிகள் மத்தியில் பேசும் போது விவசாய சட்டங்களுக்கு நீங்கள் ஆதரவு தர வேண்டும் என்று அவர்களிடம் கேட்கிறார். இது எந்த வகையில் நியாயம்.

விவசாயிகளின் போராட்டத்தால் நாட்டில் 36 ஆயிரம் கோடிக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. இதற்கும், விவசாயிகளின் உயிரிழப்பிற்கும் பிரதமர் மோடியும், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் தான் பொறுப்பேற்க வேண்டும்.

நாட்டில் உள்ள 70 சதவீத விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் மிகப் பெரிய புரட்சி ஏற்படும். இந்தப் போராட்டத்தில் 36 விவசாயிகள் உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் போராட்டத்திற்காக உயிர்துறந்த தியாகிகள், வேளாண் சட்டங்களை மத்திய அரசு திரும்பப் பெறும் வரை விவசாயிகளுக்கு ஆதரவாக மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் போராட்டம் தொடரும் என தெரிவித்தார். (4)

# இந்தியாவில் பரவும் புதிய வகை நோய்

## இலங்கைக்கு ஆபத்து என எச்சரிக்கை



(டில்லி)

இந்தியாவில் புதியவகை நோய் ஒன்று பரவிவருவதாகவும் அதன் மூலம் இலங்கைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பாக டில்லி, ராஜஸ்தான், மும்பை, குஜராத் பகுதிகளில் இந்த நோய் பரவி வரும் நிலையில் தற்போது தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங் களிலும் பரவி வருவதாக சுவிட்சர்லாந்தில் வெளியான Journal of Fungi எனும் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது என சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஒருவகை பூஞ்சை நோயான Mucormycosis எனும் இந்த நோய் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த நபர்களுக்கு விரைவாக பரவுகிறது எனவும் சுவாச கோளாறு, பார்வையிழப்பு, மூக்கு மற்றும் தாடை என்பன பலவீனமடைதல், கரைந்து போதல் மாத்திரமின்றி முகம் விகாரம் அடைவது போன்றன இந்த நோயின் பிரதான பாதிப்புகள் எனக் கூறப்பட்டுள்ளது.

கறுப்பு பூஞ்சை நோய் பாதிப்பு எனக் கூறப்படும் இந்த பூஞ்சை நோய் அபிவிருத்தியடைந்த நாடுகளில் கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் பரவியது.

எனினும் 851 பேர் மாத்திரமே இந்த நோயினால் பாதிக்கப்பட்டனர்.

ஆனால் தற்போது 80 வீதத்திற்கும் மேல் இந்தியாவில் பரவி வருகிறது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பூஞ்சை நோய் காரணமாக மும்பையில் 6 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் இந்தியாவில் பரவிவரும் இந்த நோய் தற்போது இலங்கைக்கு அருகில் வந்திருப்பதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளது. (4)

# முகக் கவசமின்றி செல்பி எடுத்த ஜனாதிபதிக்கு அபராதம் விதிப்பு



(சிலி)

முகக் கவசம் இல்லாமல் செல்பி எடுத்துக் கொண்டதற்காக, தென் அமெரிக்க நாடான சிலி நாட்டு ஜனாதிபதி செபாஸ்டியன் பினேராவுக்கு 3,500 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க நாடான சிலியில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக பொது இடங்களில் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த விதிமுறையை மீறுபவர்களுக்கு அபராதம், சிறைத் தண்டனை ஆகியவை விதிக்க முடியும்.

இந்த நிலையில், தனது இல்லத்துக்கு அருகே உள்ள கடற்கரையில் சிலி ஜனாதிபதி, எடுத்துக்கொண்ட செல்பி சமூக வலைத்தளங்களில் பரவியது.

இதையடுத்து கொவிட்-19 கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறிய குற்றத்துக்காக செபாஸ்டியன் பினேராவுக்கு 3,500 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (4)

## உணவுத் தட்டுப்...

விடுத்துள்ளது.

இதற்கமைய இலங்கையில் உள்ள மொத்த சனத்தொகையில் 20 சதவீதத்தினர் இவ்வாறு உணவு தட்டுப்பாட்டிற்கு ஆளாகப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

உணவு பஞ்சம் ஏற்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் இணைத்திருக்கின்றது.

உள்நாட்டு உற்பத்தி, இறக்குமதி என கொரோனா நெருக்கடியினால் ஏற்படுகின்ற தாக்கங்களை அடிப்படையாக வைத்து இந்த முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நீதி தொடர்பில்...

தென, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அமைப்பின் பணிப்பாளர் திருமதி பத்மநாதன் கருணாவதி தெரிவித்தார்.

அத்துடன், நூற்றுக்கணக்கான உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டதற்கும் இறந்து போனதற்குமான பின்னணியில் கூட்டமைப்பே உள்ளதெனவும், அவர் குற்றஞ்சாட்டினார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், சர்வதேச நீதி கோருதல் விடயத்தில் அரசாங்கத்தின் முகவர்களாக செயற்படும் சுமந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாதென்றார்.

வரும் ஜெனிவா கூட்டத்தொடர் தொடரில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் எடுக்கும் எந்தவொரு தீர்மானத்துக்கும் தாங்கள் சம்மதிக்க போவதில்லையெனத் தெரிவித்த அவர், அவ்வாறு கூட்டமைப்பு ஜெனிவாக்கு முண்டி அடித்துக் கொண்டு செல்வதாக இருந்தால், தாம் கடும் நடவடிக்கையை சர்வதேச அளவில் எடுப்போமெனவும் கூறினார். (ம-3,100)

## மேல் மாகாணத்...

நடந்ததான குற்றச்சாட்டில் இரு வர்த்தக நிலையங்களை சுகாதாரப் பிரிவினர் மூடியுள்ளனர்.

பருத்தித்துறை நகரில் உள்ள புடவைக் கடை ஒன்றும் அழகுசாதனப் பொருள் விற்பனை நிலையம் ஒன்றுமே இவ்வாறு நேற்று திங்கட்கிழமை சீல் வைத்து மூடப்பட்டன.

மேல் மாகாணத்துக்குச் சென்று திரும்பிய உரிமையாளர்கள் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு அறிவித்தல் வழங்காமல் சுகாதார நடைமுறைகளை மீறி வர்த்தக நிலையங்களை திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலேயே அவை மூடப்பட்டன. (ம-3,60)

## ரி56 ரக துப்பாக்...

யினரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் புதைத்த வைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் பெய்த மழையின்போது அவை வெளியே வந்துள்ளது.

இது தொடர்பில் தகவலறிந்த விசேட அதிரடிப்படையினர் அவற்றை நேற்று மீட்டுள்ளனர்.

இதன்போது ரி56 ரக துப்பாக்கிகள் 05, ரவைக்கூடு ஒன்று மற்றும் 30 ரவைகளும் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட பகுதி விடுதலைப் புலிகளின் சூட்டு பயிற்சி இடம் பெறும் பகுதிகளென்பதால் அவை விடுதலைப் புலிகள் பயன்படுத்தியதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (ம-3,100)

## சுமார் 46 இலட்...

பெறுமதியான கேரள கஞ்சா பொதிகளை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சூட்சுமமான முறையில் டொல்பின் ரக வாகனத்தின் இருக்கைகளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 14 கிலோ 600 கிராம் கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டதோடு, மன்னார் சாந்திபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய சாரதியும் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் விடத்தல்தீவு மீன் வாடி பகுதியில் 5 கிலோ 95 கிராமும் அதனைத் தொடர்ந்து பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் நடத்திய தேடுதலில் அப்பகுதியில் இருந்து 26 கிலோ 790 கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் 48 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரின் விசேட சோதனை நடவடிக்கைகளின்போது சுமார் 46 கிலோ 485 கிராம் கேரளா கஞ்சாவும் அதனை கொண்டு செல்ல பயன்படுத்திய வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது. (ம-3,285)

## ஜெனிவாவில்...

பிரித்தானியாவுடனும் இணைந்து இதற்கான ஆரம்பக்கட்ட களப் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய ஐ.நா. தீர்மானம் 30/1 இலிருந்து விலகியதாக இலங்கை அரசு அறிவித்தது.

இதனை அடுத்து இலங்கைக்கு எதிராக ஒரு புதிய தீர்மானத்தை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

## 3 பேருக்கு...

383 பேருக்கு கோவிட் - 19 பரிசோதனை செய்யப்பட்டன.

இதில் யாழைச் சேர்ந்த 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மருதனார்மடம் சந்தைப் பகுதிக்கு சென்று வந்த கோப்பாய், ஊர்காவற்றுறையை சேர்ந்தவர்கள், ஏற்கனவே தொற்று கண்டுபிடிக்கப்பட்டவருடன் முன்னர் தொடர்பிலிருந்த இணுவிலைச் சேர்ந்தவர் என மூவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## ஏமாற்ற முடி...

சுமந்திரன் சிலரை எல்லா காலத்திலும் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லா காலத்திலும் ஏமாற்ற முடியாது. அதுவும் அவருக்கு சட்டம் படிப்பித்த ஆசிரியரை முட்டாளாக்க பார்ப்பது குருத்துரோகம். நாங்கள் கூறுவது பொய் என சுமந்திரன் சொல்லியிருந்தார்.

அவர் சம்மதித்தால், அவர் அனுப்பிய ஆவணத்தின் மொழிபெயர்ப்பை வெளியிட தயாராக இருக்கிறேன்.

அது வெளியானால், யார் பொய் சொன்னது என தெரிய வரும். இந்த விடயத்தில் சுமந்திரன் அளாப்புகிறார் எனத் தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்று யாழில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவரது ஆவணமொன்று எமக்கு பரிசீலிக்க தரப்பட்டது. அதன் பின்னர், அதை ஏற்க முடியாதென எமது கருத்தை தெரிவித்தேன்.

நானும் கஜேந்திரகுமாரும் பொய் கூறுவதாக அவர் கூறுகிறார். அவர் கூறுவது சரியா, அல்லது நானும் கஜேந்திரகுமாரும் கூறுவது சரியா என்பதை, அவர் கொடுத்த கடிதத்தை மொழி பெயர்த்தால் தெரிந்து கொள்ளலாம். அதை மொழிபெயர்க்க அவர் அனுமதித்தால், அந்த கடிதத்தை மொழி பெயர்க்கலாம். அவரது அனுமதியின்றி அதை செய்ய நான் விரும்பவில்லை.

ஆனால், எங்களுடைய பதிலை மக்களிற்கு நாம் கூறினோம். ஏனெனில் இவ்வாறான விடயங்கள் நடக்கிறது என்பதை மக்களிற்கு எடுத்துக் கூறுவதற்காக.

அதாவது தமது சிபாரிசுகளை அவர் கூறியிருப்பது, இலங்கை உட்பட ஒரு தடவையல்ல மூன்று தடவைகள் மனித உரிமைகள் பேரவையிலுள்ள நாடுகளின் சம்மதத்துடன் முன்னர் இயற்றியதை போன்ற கூட்டத் தீர்மானத்தை 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் இயற்ற வேண்டுமென கூறியிருக்கிறார்.'

முன்னர் 3 முறை காலக்கெடு வழங்கியதை போல மேலுமொரு முறை காலக்கெடு வழங்க வேண்டுமென்பதுதான் அந்த ஆவணத்தின் உள்ளடக்கம். அதில் எந்த மயக்கமுமில்லை.

அவர் தனது சிபாரிசுகளிற்கு அப்பால் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் களினால் முன்னர் செய்த காரியங்களை அவர் குறிப்பிடுகிறார். சிரியா, மியன்மார் பற்றியும் அதில் குறிப்பிடுகிறார்.

ஆனால் அந்த நாடுகள் சம்பந்தமாக செய்தது போல, இலங்கை சம்பந்தமாகவும் பொறிமுறைகளை இயற்றுங்கள் என அவர் எங்கும் கூறவில்லை. முன்னர் எடுத்த தீர்மானங்கள் போல தீர்மானங்களை எடுங்கள் என தனது சிபாரிசை சமர்ப்பித்து விட்டு, சில நாடுகளில் இப்படியும் நடந்தது என வேறொரு விடயமாக குறிப்பிட்டார். ஆனால், இவ்வாறு எங்களிற்கு செய்யப்பட வேண்டுமென எங்கும் கூறவில்லை.

இதைத்தான் கிராமங்களில் அளாப்புவது என்பார்கள். சுமந்திரன் இந்த விடயத்தில் அளாப்புகிறார் என்றே நினைக்கிறேன்.

எமக்கு இந்த கடிதம் பற்றிய எமது அபிப்பிராயங்கள் வெளியாக முன்னரே ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பப்பட்டு விட்டதாக இப்பொழுது அறிந்தேன். எமக்கு பரிசீலனைக்கு தந்த உடனேயே, எமது அபிப்பிராயத்திற்கு முன்னதாக கடிதம் அனுப்பப்பட்டு விட்டதாக அறிகிறேன். அப்படி நடந்தால் அது வருந்தத்தக்கது என்றார். (ம-3)

## நாட்டில் மேலும்...

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை தொற்றுறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 37 ஆயிரத்து 631 ஆக அதிகரித்துள்ளது.(ம-3)


**தன நிதானய** — திகதி - 21/12/2020 — சீட்டிழுப்பு இலக்கம் - 380 — C 23 24 29 70 — ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள் — ஆயிரம் முறை 1 2 9 2

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 21.12.2020 — சீட்டிழுப்பு இலக்கம் 2638 — ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 14 48 72 79

**மஹஜன சம்பத** — திகதி 2020/12/21 — சீட்டிழுப்பு இலக்கம் 4343 — Q 2 5 1 3 1 1

**மெகா பவர்** — திகதி 21/12/2020 — சீட்டிழுப்பு இலக்கம் 0710 — P 13 1 22 47 75

**வாசனா சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1643 — திகதி 2020.12.21 — ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 12 14 30 60

**அத கோடிபதி** — கிழமை: திங்கட்கிழமை — சீட்டிழுப்பு இல: 1139 — வர்ணம்: சிவப்பு — சீட்டிழுப்பு திகதி: 21.12.2020 — இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 92,456,010 — வெற்றி இலக்கங்கள் 10 16 61 65 — ஆங்கில எழுத்து J — வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா** — கிழமை: திங்கட்கிழமை — சீட்டிழுப்பு இல: 3469 — வர்ணம்: கடும் நீலம் — சீட்டிழுப்பு திகதி: 21.12.2020 — இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,985,540 — வெற்றி இலக்கங்கள் 20 36 54 63 — ஆங்கில எழுத்து B

**ராசி** — சுப்பர் ஜக்பொட் 21,76,782/= — திகதி: 21.12.2020 — வெற்றி வாரம்: 3020 — வர்ணம்: மஞ்சள் — வெற்றி இலக்கங்கள் 18 35 37 59 — சிம்மம் — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 84,85,020

**SUPER BALL** — சீட்டிழுப்பு வாரம் 1313 — நிறம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 21/12/2020 — தினம் திங்கட்கிழமை — வெற்றி எழுத்தும் இலக்கங்களும் W 12 16 23 70 — அடுத்த சுப்பர் ஜக்பொட 59,176,687

**ஜயோதா** — சீட்டிழுப்பு வாரம் 1717 — சீட்டிழுப்பு திகதி 21/12/2020 — வெற்றி இலக்கங்கள் 02 06 46 59 — ஆங்கில எழுத்து D — எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 20,000,000 — தொ. பே.: 0112 333 546/47 — Web: www.dlb.lk

# தேவைகருதிய சேவை இடமாற்றக் கொள்கையால் ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்

## வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் தேவை கருதிய சேவை இடமாற்றத்தின் சுற்றுநிருபத்தால், ஆசிரியர்கள் உளநெருக்கீட்டுக்கு உள்ளாகியிருப்பதுடன் குடும்பங்களின் பிரிவினைக்கும் வித்திட்டுள்ளது. இவ்வாறு உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கை வருமாறு; இடமாற்றம் என்பது எல்லோருக்குமானது. அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அது மாணவர்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் அதே நேரம் ஆசிரியர்கள் மகிழ்ச்சியாகப் பணிசெய்யக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

மாறாக, வடமாகாணத்தின் ஆசிரியர் இடமாற்றத்தில் நிரந்தரமான சுற்றுநிருபக் கொள்கை இதுவரை இல்லை. காலத்திற்கு காலம் சுற்றுநிருபம் மாற்றப்படுவதனால் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு ஏற்றவகையில் சில ஆசிரிய சங்கங்கள் தமது சொந்த நலன்சார்ந்து செயற்படுகின்றன. இதனால் அந்த அமைப்புகள் ஆசிரியர்களுக்காகக் குரல் கொடுக்கத் தவறுகின்றன.

இங்கு இடமாற்றத்தில் செல்லாத ஆசிரியர்கள் விதிவிலக்கு. மாறாக இடமாற்றத்தை மனதார ஏற்றுச்செல்லும் ஆசிரியர்கள் மத்தியில் பின்வரும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அவையாவன,

- இடமாற்றத்திற்கான கால அளவு 3 வருடம் என்பதனை வடமாகாண கல்வித் திணைக்களம் குறிப்பிட மறுக்கின்றமை.
- மூன்று வருடம் என குறிப்பிட்டு அனுப்பிய ஆசிரியர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.
- கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரிந்த ஆசிரியர்களை மீளவும்இடமாற்றத்திற்கு கோரல்.
- இடமாற்றத்தின்போது ஒழுங்கான திட்டமிடல் இன்மையால், மாகாணக்கல்வித் திணைக்களத்தின் கடிதத்தினை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஏற்பதில்லை. இதனால் ஆசிரியர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

தவிர, இன்னும் 7 வருடம் கடந்தும் ஆசிரியர்கள் விடுவிக்கப்படவில்லை என்பது மனவருத்தத்திற்கு உரியது. குரல் கொடுக்க வேண்டிய ஆசிரியர் சங்கங்கள் தமது உற்றார், உறவினர், நண்பர்கள் போன்றோரைக் காப்பாற்றுவதற்காக மாகாணக் கல்வித் திணைக்களத்தின் செயற்பாட்டுக்கு தலையாட்டிகளாக இருக்கின்றனர்.

இதனால் நம்மை நாம் பாதுகாக்கும் பொருட்டு, இடமாற்றத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களும் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இது மாகாண கல்வித் திணைக்களத்தினால் வலிந்து உருவாக்கப்படுகின்றதே ஒழிய ஆசிரியர்கள் விரும்பிப் போராட முனையவில்லை என்பதை இடம்மாற்றம் பெற்ற ஆசிரியர்கள் மிகவும் மன வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றனர் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ம-03)

# கொரோனாவால் உயிரிழந்தவரின் சடலத்தை பாதுகாத்து வையுங்கள்

## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

கொரோனாவினால் உயிரிழந்தவரின் சடலத்தை பாதுகாத்து வைக்குமாறு காலி நீதிமன்றம் உத்தரவிட்டது.

தற்போதைய விதிமுறைகளின் கீழ் உடலை தகனம் செய்ய அனுமதிக்கக்கூடாதென, உயிரிழந்தவரின் 3 மகன்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்றுக்கொண்ட காலி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் பவித்ரா சஞ்சீவனி பதிரன நேற்று உத்தரவிட்டார்.

கோவிட் தொற்றுநோயால் இறந்த முஸ்லிம்களை தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்பது குறித்த கலந்துரையாடலில் இறுதி முடிவெடுக்கும் வரை உடலை அடக்கம் செய்ய அனுமதிக்குமாறு இறந்தவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலி காராபிட்டிய போதனா மருத்துவமனையின் பதில் மரணவிசாரணை அதிகாரி சந்திரசேன லொக்குகே, உயிரிழந்தவரை தனிமைப்படுத்தப்பட்ட விதிகளின் கீழ் அரசாங்க விதிமுறைகளின்படி தகனம் செய்ய உத்தரவிட்டபோது, உடலை தகனம் செய்தால் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று மகன்கள் குறிப்பிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அனைத்து தரப்பின் வாதங்களையும் கேட்ட நீதவான், இறுதிமுடிவெடுக்கும் வரை உடலை பாதுகாக்க உத்தரவிட்டார். (ம-3)

# சிறைச்சாலை கொத்தணி; 3,414 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் சிறைச்சாலை கொத்தணியில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுபவர்களது எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

அந்தவகையில் நேற்று சிறைச்சாலை கொத்தணியில் 42 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள்திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து இதுவரை சிறைச்சாலை கொத்தணியில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 3 ஆயிரத்து 414 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-03)

# 4 மாவட்டங்களுக்கு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் 4 மாவட்டங்களுக்கு மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் தொலுவ மற்றும் உடுதும்பற பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும், பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-03)

# இணுவிலில் இன்று பலருக்கு பிசிஆர்

(யாழ்ப்பாணம்)

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட இணுவிலில் 198 பேருக்கும், சுன்னாகத்தில் இயங்கி வரும் வலி. தெற்குப் பிரதேச சபையில் 123 பேருக்கும் நேற்றுத் திங்கட்கிழமை(21) பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இணுவில் வடகிழக்கு அங்களப்பாய் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நேற்றுக் காலை முதல் நண்பகல்-12 மணிவரை இடம்பெற்ற பிசிஆர் பரிசோதனையில் இணுவில் வடகிழக்கு, காரைக்கால் மற்றும் பல பகுதிகளையும் சேர்ந்த மக்களுக்கு இதன்போது பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதுடன் வலி. தெற்குப் பிரதேச சபையில் சபையின் தவிசாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் என 109 பேருக்கும், வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 15 பேருக்கும் பிசிஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் இணுவில் அறிவாலயத்தில் மருதனார்மடம் சந்தி முச்சக்கர வண்டிச் சாரதிகள், அவர்களுடன் தொடர்புடையவர்கள், மருதனார்மடம் நகர வர்த்தகர்கள் உள்ளிட்ட பலருக்கும் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ம-03,18)


**கட்டட பராமரிப்பாளர் தேவை**
யாழ். திருநெல்வேலியிலுள்ள வியாபாரக் கட்டடம் ஒன்றினை பராமரிக்கக்கூடிய ஒருவர் பகுதிநேர வேலைக்குத் தேவை.
கல்வித் தகைமை : G.C.E O/L
வயதெல்லை : 35 - 50 வரை
075 099 9243

**வீடு வாடகைக்கு**
நாவலர் வீதி TCT முன்பாக பல்கலைக்கழக மாணவிகளுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு. (5020)
077 515 1352

**மணமகள் தேவை**
1979.02.07 இல் பிறந்த 5'.6" உயரமுடைய சைவ உயர்குலம் மிருகசீரிடம். 2ஆம் பாதம், கிரகபாவம் 6 உடைய மணமகனுக்கு அழகிய பொருத்தமான மணமகள் தேவை. (5021)
077 330 1798

**வாடகைக்கு**
யாழ். திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியில் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட வியாபார மற்றும் கல்வி நிலையங்களுக்கு ஏற்ற இடம். தளபாட வசதியுள்ள (T.V, அலுமாரி, இணைந்த குளியலறையுடன் சமையலறை) அறைகள்.
077 953 0496 (5023)

**உடனடி வேலை வாய்ப்பு**
Study & Work in North Provincial
யாழ்ப்பாணம் / கிளிநொச்சி / வவுனியா / மன்னார்...
திறமையானவர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்படுவர்.
நிர்வாக அதிகாரி, மேற்பார்வையாளர், விநியோகஸ்தர், உதவி முகாமையாளர்.
வயதெல்லை : 18 - 28, கல்வித் தகைமை : G.C.E O/L or A/L கற்றிருத்தல்.
பயிற்சி இலவசமாக வழங்கப்படும். வருமானம் : 18,000/= - 45,000/=

Inner Circle
தொடர்பு : 076 770 7759
100/3 , 3rd Floor, முட்டாசுகடை சந்தி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(5022)

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-899)

**விஞ்ஞான வகுப்புக்கள்**
தரம் 9, 10 மற்றும் 11 இற்கான விஞ்ஞான பாடம் தனி, குழு மற்றும் ஒன்லைன் மூலமாக கற்பிக்கப்படுகின்றது.
( பட்டதாரி ஆசிரியர் ) (5019)
076 688 9449


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.